winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஏப்ரல் 2021

ஏப்ரல் 22–30

**1. அத்தியாவசிய சேவைகளில் பணியாற்ற மறுப்பது எச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது?**

**அ) அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டம் (ESMA) ☑**

ஆ) பேரிடர் மேலாண்மை சட்டம்

இ) தொற்று நோய்கள் சட்டம்

ஈ) கொள்ளை நோய் நிலைகள் சட்டம்

Essential Services Maintenance Act

✓ சில அத்தியாவசிய சேவைகளையும் சமூகத்தின் இயல்பு நிலையையும் பராமரிப்பதற்காக, கடந்த 1968'இல் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டமானது (ESMA) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் அதன் சாசனத்தில் அத்தியாவசிய சேவைகளின் பட்டியலை கொண்டுள்ளது. COVID-19 பாதிப்புகள் விரைவாக அதிகரித்ததை அடுத்து, சத்தீஸ்கர் மாநில அரசு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

✓ அத்தியாவசிய சேவைகளில் பணியாற்ற மறுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இதில் சுகாதார ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள், நீர் மற்றும் மின்சாரம் விநியோகிக்கும் சேவைகளில் பணியாற்றும் பனியாளர்கள் உள்ளனர்.

---

**2. "IP குரு" என்ற வல்லுநர் குழுவை தொடக்கிய நிறுவனம் எது?**

அ) மின்னணு & தகவல் தொடர்பு அமைச்சகம்

ஆ) NITI ஆயோக்

**இ) NIXI ☑**

ஈ) NASSCOM

✓ இந்தியாவின் தேசிய இணைய பரிமாற்றகம் (NIXI), இந்தியாவில் IPv6 நெறிமுறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சில புதிய முயற்சிகளை அறிவித்தது. கடந்தாண்டு பிப்ரவரி மாதத்தில், 2020 மார்ச் மாதத்துக்குள் அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் IPv6'க்கு மாற்றுமாறு தொலை தொடர்புத்துறை ஆணையிட்டது.

✓ IPv6 முறைகளுக்கு மாறுவதை ஆதரிப்பதற்காக 'IP குரு' என்ற நிபுணர் குழுவை NIXI அறிமுகப்படுத்தியது. NIXI, IPv6'க்கான கல்வி தளத்தையும் உருவாக்குகிறது. அது, NIXI அகாதமி மற்றும் ஒரு NISI IP-Index என அழைக்கப்படுகிறது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பெனின் வெண்கலங்கள் காணப்பட்ட நாடு எது?**



அ) தென்னாப்பிரிக்கா

**ஆ) நைஜீரியா ☑**

இ) கிரேக்கம்

ஈ) எகிப்து

✓ பெனின் வெண்கலங்கள் என்பவை பெனின் இராச்சியத்தின் அரச அரண்மனையில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட உலோக தகடுகள் மற்றும் சிற்பங்களின் ஒரு தொகுப்பாகும். பெனின் நகரம், நவீன தெற்கு நைஜீரியாவில் அமைந்துள்ளது. வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம்வாய்ந்த படைப்புகளை உருவாக்கிய திறமையான கைவினைஞர்களுக்கு இது புகழ்பெற்றதாகும்.

✓ 1897ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் வீரர்கள் பெனின் நகரத்தை சூறையாடி, உலோக சிற்பங்களின் தொகுப்பைத்திருடினர். அண்மையில், அந்த உலோக சிற்பங்கள் அனைத்தையும் இங்கிலாந்து அதன் தற்போதைய ஐரோப்பிய சுங்க அதிகாரிகளால் மூன்று ஆண்டுகளுக்குள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற INS நிரீக்ஷக், கீழ்காணும் எந்த வகை கப்பலின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது?**



அ) நீர்மூழ்கிக்கப்பல்

**ஆ) நீர்மூழ்கு ஆதரவு கலம் ☑**

இ) கடலோர ரோந்து கலம்

ஈ) அழித்தொழிப்பான்

✓ காணாமல்போன மீனவர்களை தேடி மீட்பதற்காக இந்திய கடற்படை தனது சிறப்பு நீர்மூழ்கு ஆதரவு கலமான INS நிரீக்ஷக்கை மங்களூரு கடற்கரையில் நிறுத்தியுள்ளது.

✓ அண்மையில், கேரளாவில் பதிவு செய்யப்பட்ட எந்திர மீன்பிடி படகில் சென்ற ஒன்பது மீனவர்கள் காணாமல்போயினர். இந்தப்பிரச்சனையின் காரணமாக, இந்திய கடற்படை சிறப்பு உபகரணங்கள் மற்றும் கடற்படை மூழ்காளர்களைப் பயன்படுத்தி ஆழ்கடல் மூழ்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

---

**5. லாக்ஹீட் மார்டினுடன் இணைந்து இந்திய விமானப்படைக்கு முதலாவது லேசான குண்டு துளைக்காத வாகனங்களை வழங்கிய நிறுவனம் எது?**

அ) BEL

ஆ) DRDO

**இ) அசோக் லேலண்ட் ☑**

ஈ) TATA மோட்டார்ஸ்

✓ ஹிந்துஜா குழுமத்தின் முதன்மை நிறுவனமான அசோக் லேலண்ட், முதல் லேசான குண்டு துளைக்காத வாகனங்களை இந்திய வான் படைக்கு வழங்கியுள்ளது. இந்த வாகனங்கள் அமெரிக்காவைச் சார்ந்த விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனமான லாக்ஹீட் மார்டினுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

---

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "MK-4482" என்றால் என்ன?**



அ) ஏவுகணை துவக்கி

**ஆ) வைரஸ் எதிர்ப்பு மருந்து ☑**

இ) நீர்மூழ்கி கப்பல்

ஈ) ஆளில்லா வான்வழி வாகனம்

✓ ஓர் அண்மைய ஆய்வின்படி, ஒரு சோதனை வைரஸ் தடுப்பு மருந்தான MK-4482, SARS-CoV-2 நோய்த்தொற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்ட வெள்ளெலிகளின் நுரையீரலில் வைரஸின் அளவை குறைத்துள்ளதாக கூறப்படுகிறது. அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் அறிவியலாளர்கள் நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் இதழில் இந்த ஆய்வை வெளியிட்டனர்.

✓ MK-4482, தற்போது மனிதர்களில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இது வாய்வழி மருந்தாக வழங்கப்படுகிறது. இத்தகவல்கள்மூலம் MK-4482 சிகிச்சையானது, கொரோனா வைரசால் அதிக ஆபத்து ஏற்படுவதைக் குறைக்கக்கூடும் என்று தெரிகிறது.

---

**7. தேசிய அளவிலான பருவநிலை பாதிப்பு குறித்து விரிவான மதிப்பீட்டு அறிக்கையை வெளியிடுகிற துறை எது?**



அ) சுற்றுச்சூழல் துறை

**ஆ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ☑**

இ) அணுவாற்றல் துறை

ஈ) விண்வெளித் துறை

✓ "தேசிய அளவிலான பருவநிலை பாதிப்பு குறித்து விரிவான மதிப்பீட்டு அறிக்கை" என்ற தலைப்பிலான அறிக்கையொன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் வெளியிடப்படவுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் & மாவட்டங்களின் காலநிலைமாற்ற பாதிப்பு குறித்த விரிவான தேசிய அளவிலான மதிப்பீட்டை இவ்வறிக்கை வழங்குகிறது.

✓ அறிவியல் தொழில்நுட்பத் துறை, வளர்ச்சி & ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகமை ஆகியவற்றின் உதவியுடன் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது.

---

**8. சுற்றுச்சூழல் பாதிப்பு குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்குவதற்காக 'ஈகோசைட்' மசோதாவை உருவாக்கியுள்ள நாடு எது?**

அ) ஜெர்மனி

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) நியூசிலாந்து

ஈ) பிரேசில்

✓ சுற்றுச்சூழல் பாதிப்புச் செயல்களைத் தண்டிக்க முற்படும் "சுற்றுச்சூழல் குற்றத்தை" அமல்படுத்தும் மசோதவை உருவாக்க பிரான்ஸின் தேசிய சட்டமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. ஆறொன்றை மாசுபடுத்துதல்போன்ற தேசிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் மிகமோசமான நிகழ்வுகளுக்கு இந்த மசோதா பயன்படுத்தப்படும்.

- ✓ சுற்றுச்சூழலுக்கு கேடுவிளைவிக்கும் ஒரு குற்றம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் தண்டனைக்குரியதாகும்.

---

**9. மூளையின் அளவை அதிகரிக்கவும் குறைக்கவும் திறன்கொண்ட முதல் உயிரினம் எது?**

**அ) இந்திய குதிக்கும் எறும்பு ☑**

ஆ) சிங்கவால் குரங்கு

இ) இந்திய கானமயில்

ஈ) ஆலிவ் ரிட்லி ஆமை



- ✓ இந்திய குதிக்கும் எறும்புகள் அதன் மூளையை கிட்டத்தட்ட 20 சதவீத அளவுக்கு சுருக்கி அதன் உடலை இனப்பெருக்கம் செய்ய தயார் செய்கிறது என அண்மையில் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வின்படி, எறும்பு அதன் மூளையின் அளவை அதற்கடுத்த வாரங்களில் மீண்டும் அதிகரிக்கக்கூடும்.
- ✓ மூளையின் அளவை அதிகரிக்கும் மற்றும் குறைக்கும் திறன்கொண்ட முதல் பூச்சியினம் இதுவாகும். தேனீ உள்ளிட்ட பிற பூச்சிகள் அவற்றின் மூளையின் அளவை அதிகரிக்கும் திறன் கொண்டதாகும்.

---

**10. உலகின் முதல் மலிவான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய நலவாழ்வு தயாரிப்பை, 'டியூரோகீ சீரிஸ்' என்ற பெயரில் உருவாக்கி உள்ள நிறுவனம் எது?**

அ) IISc, பெங்களூர்

**ஆ) IIT ஹைதராபாத் ☑**

இ) IIT மெட்ராஸ்

ஈ) NIT வாரங்கல்

- ✓ மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்', உலகின் முதல் மலிவான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய நலவாழ்வு தயாரிப்பை, 'டியூரோகீ சீரிஸ்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தினார்.
- ✓ IIT ஹைதராபாத் ஆராய்ச்சியாளர்களால் இந்த நலவாழ்வு தயாரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதுமையான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய தொழில்நுட்பங்கள் COVID-19 பரவலை எதிர்த்து உருவாக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 70 கோடி ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகள்: 6 இந்திய நிறுவனங்கள் தயாரிப்பு**

ஆண்டுதோறும் எழுபது கோடி ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகளை ஆறு இந்திய நிறுவனங்கள் தயாரிக்கவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் உயிரிதொழில்நுட்பத் துறை செயலர் ரேணு ஸ்வரூப் கூறியது:

தற்போது மூன்று கரோனா தடுப்பூசிகள் இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இவைதவிர பாரத்பயோடெக்கின் மூக்கு வழியாக செலுத்தும் தடுப்புமருந்து, ஸைடஸ் கடிலா, பயோஇ, ஜெனோவா நிறுவனங்களின் தடுப்பூசிகள் பல்வேறு கட்ட பரிசோதனைகளில் உள்ளன. அவற்றை உருவாக்கும் ஆரம்பகட்டப்பணிகளின்போது அந்த நிறுவனங்களுக்கு மத்திய உயிரிதொழில்நுட்பத்துறை ஆலோசனைகள், தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி வழங்கியது. அந்தத் தடுப்பூசி மருந்துகளின் தற்போதைய பணிகளுக்கு சுமார் ₹400 கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்குகிறது.

அந்தத் தடுப்பூசி மருந்துகளை மாதந்தோறும் 1.5 கோடி முதல் 2 கோடி அளவில் தயாரிக்கும் விதமாக ஏற்கனவே உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஒப்புதல் கிடைத்தவுடன், அந்தத் தடுப்பூசி மருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டுவரமுடியும். ரஷியா உருவாக்கியுள்ள ஸ்புட்னிக்-வி கரோனா தடுப்பூசியை ஆண்டுதோறும் 70 கோடி அளவில் 6 இந்திய நிறுவனங்கள் தயாரிக்கவுள்ளன என்று தெரிவித்தார்.

---

**2. இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி: மத்திய அரசு**

இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அதில் 6,600 மெட்ரிக் டன் ஆக்சிஜன் மருத்துவப் பயன்பாட்டுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. தில்லியில் மத்திய சுகாதாரத் துறை செயலர் இராஜேஷ் பூஷன், NITI ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) VK பால் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது சுகாதாரச் செயலர் இராஜேஷ் பூஷன் கூறியது:

தொழிற்துறைகளில் ஒன்பது துறைகளைத்தவிர இதர துறைகளின் பயன்பாட்டுக்காக ஆக்சிசன் விநியோகிக்க தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவபயன்பாட்டுக்கு கூடுதலாக ஆக்சிசன் விநியோகிக்க முடியும். இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் தயாரிக்கப்படுகிறது. இதில் 6,600 மெட்ரிக் டன் ஆக்சிஜன் மருத்துவப் பயன்பாட்டுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

---

**3. பிரான்ஸிலிருந்து இந்தியா வரும் மேலும் 4 ரபேல் போர் விமானங்கள்: விமானப்படைத் தளபதி பதெளரியா கொடியசைத்து அனுப்பி வைப்பு**

பிரான்ஸ் நாட்டிலிருந்து ஐந்தாவது தவணையாக நான்கு ரபேல் போர் விமானங்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸின் மெரிக்னேக்-போர்டியாக்ஸ் விமானப்படைத்தளத்தில் நடந்த நிகழ்ச்சியில், அங்கு ஐந்து நாள் பயணமாக சென்றுள்ள இந்திய விமானப்படைத்தளபதி RKS பதெளரியா பங்கேற்று விமானங்களை கொடியசைத்து இந்தியா அனுப்பிவைத்தார்.

பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம் இருந்து 36 அதிநவீன ரபேல் போர் விமானங்களை வாங்க கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. ₹59,000 கோடியில் இந்த விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, இதுவரை 14 ரபேல் போர் விமானங்களை அந்த நிறுவனம் இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது. இப்போது மேலும் நான்கு விமானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

**4. வேளாண் பொருள்கள் ஏற்றுமதி 16.88 சதவீதம் அதிகரிப்பு**

கடந்த 2020-21ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, இந்தியாவின் வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி 16.88% அதிகரித்துள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது: கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நடப்பாண்டு பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் ₹2.74 இலட்சம் கோடி மதிப்பிலான வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ₹2.31 இலட்சம் கோடி மதிப்பிலான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதாவது, வேளாண் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி 16.88% அதிகரித்துள்ளது.

இதேபோன்று, அதே காலகட்டத்தில் வேளாண் உற்பத்திப் பொருள்களின் இறக்குமதி 3 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ₹1,37,014 கோடி மதிப்பிலான வேளாண் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டில் ₹1,41,034 கோடியாக அதிகரித்துள்ளது. கரோனா தொற்று பரவலால் பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்ட போதிலும், வேளாண் துறை வர்த்தகம் ₹93,097.76 கோடியிலிருந்து ₹1,32,579.69 கோடியாக அதிகரித்துள்ளது.

பல ஆண்டுகளாக அதிக அளவிலான வேளாண் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து, வர்த்தக உபரி நிலையை இந்தியா தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு வருகிறது. கரோனா தொற்று பரவல் காலகட்டத்தில் கூட, உணவுப்பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, இந்தியா தொடர்ந்து உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. பைங்குடில் வாயு வெளியேற்றத்தை 55% குறைக்க ஐரோப்பிய யூனியன் ஒப்புதல்**

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பைங்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை 55% குறைக்க ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோன்டெர் லேயன் கூறியதாவது: வரும் 2050ஆம் ஆண்டுக்குள் காற்றிலிருந்து அகற்றப்படும் பைங்குடில் வாயுக்களின் அளவுக்கும் காற்றில் கலக்கப்படும்

அந்த வகை வாயுக்களின் அளவுக்கும் இடையே வேறுபாடில்லாமல் செய்வதற்கான எங்களது வாக்குறுதி, தற்போது சட்டப்பூர்வமாகியுள்ளது.

இந்த இலக்கை எட்டுவதற்கு ஐரோப்பிய யூனியன் உறுப்புநாடுகளும் ஐரோப்பிய நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளன. முதற்கட்டமாக, வரும் 2030ஆம் ஆண்டுக்குள் காற்றில் பைங்குடில் வாயுக்களின் அளவை கடந்த 1990ஆம் ஆண்டில் இருந்ததைவிட 55 சதவீதம் குறைப்பதற்கும் உறுப்புநாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன என்றார் அவர்.

பூமி கடுங்குளிரில் உறைந்து போகாமல், அதில் பசுமைத் தாவரங்களும் பிற உயிரினங்களும் வாழ்வதற்கேற்ற வெப்பத்தை ஏற்படுத்தித் தரும் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன் வாயு ஆகியவை பைங்குடில் வாயுக்கள் என்றழைக்கப்படுகின்றன. இந்த வாயுக்களின் விகிதம், தொழிற்புரட்சி காரணமாக வளிமண்டலத்தில் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரித்து, வளிமண்டலத்தின் சுழற்சிப் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வறட்சி, அனல்காற்று, காட்டுத்தீ, பனிப் பாறைகள் உருகி கடல்மட்டம் அதிகரித்தல், அதீத மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

'பருவநிலை மாற்றம்' என்றழைக்கப்படும் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாடுகள் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதில், இந்தப் பிரச்சனைக்குக் காரணமான கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை உலக நாடுகள் ஒப்புக்கொண்டன. இதுதொடர்பான சர்வேதச முயற்சியின் ஒருபகுதியாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் சுமார் 40 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச பருவநிலை மாநாடு வரும் ஏப். 22 மற்றும் 23'இல் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னதாக, ஐரோப்பிய யூனியன் நாடுகள் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

---

**6. ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்துக்கு விருது:**

ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலைக்கு இந்தியா உச்ச தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு விருதுகள்-2020 சார்பில் 'தங்கரகம்' விருது வழங்கப்பட்டுள்ளது.

---

**7. பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு: கல்லூரிகளில் நடத்த UGC உத்தரவு**

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) செயலர் ரஜ்னிஸ் ஜைன், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: மத்திய நாடாளுமன்ற நிலைக்குழுவின் 230ஆவது அறிக்கையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காக பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வழிகாட்டுதல்களை நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அவசியம் பின்பற்ற வேண்டும். பாலின சமத்துவம், பெண்கள் உடல்நலன், அதிகாரப்பகிர்வு, பாதுகாப்பு, தலைமைப்பண்பு உள்ளிட்ட அம்சங்களை பாடத்திட்டத்தில் கூடுதலாக இணைக்க வேண்டும்.

அதேபோல, பெண்களிடம் மரியாதையாகவும், கண்ணியத்துடனும் நடந்து கொள்வது குறித்து 'பெண்கள் பாதுகாப்பு' என்ற தலைப்பில் இணையவழியில் கருத்தரங்குகளை நடத்தவேண்டும். இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிக்கையாக தயாரித்து UGC'க்கு அனுப்பிவைக்க வேண்டும். இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

**8. கரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசியை அதிகம் வீணாக்கும் மாநிலங்கள்: தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக RTI மூலம் அம்பலம்**

தடுப்பூசியை மாநிலங்கள் அதிக அளவில் வீணாக்கி வருவதாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மூலம் தெரியவந்துள்ளது. இதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. உலக நாடுகளில் கரோனா வைரஸ் பாதிப்பு இந்தியாவில்தான் மிகமோசமாக உள்ளது. நாள்தோறும் சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்படுகிறது.

**கரோனா பாதிப்பில் நான்காம் இடம்:** இந்நிலையில் கரோனா பாதிப்பில் தமிழ்நாடு 4ஆவது இடத்தில் உள்ளது. பல மாநிலங்களில் கரோனா கால கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. சில மாநிலங்களில் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் பதினைந்து நாட்கள் முழு ஊரடங்கும், தில்லியில் ஆறு நாட்களுக்கு ஊரடங்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. கரோனா அதிகம் உள்ள மாநிலங்களில் கரோனா வைரஸ் தடுப்பூசிகளும் அதிக அளவில் போடப்பட்டு வருகின்றன.

ஆனால் பல்வேறு மாநிலங்களில் கரோனா தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை இருப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் மாநிலங்கள் அதிக அளவில் கரோனா தடுப்பூசிகளை வீணாக்கி வருவதாக RTIமூலம் தெரியவந்துள்ளது. குறிப்பாக இவ்வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

சுமார் 12 கோடி தடுப்பூசி டோஸ்கள் மாநிலங்களில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 44 லட்சம் டோஸ்கள் மாநிலங்களால் வீணாக்கப்பட்டுள்ளன. வீணாக்கப்பட்ட டோஸ்களில் தமிழ்நாடு 12.10 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது.

ஹரியாணா 9.74 சதவீதத்துடன் இரண்டாவது இடத்திலும், பஞ்சாப் 8.12 சதவீதத்துடன் 3ஆவது இடத்திலும், மணிப்பூர் 7.8 சதவீதத்துடன் 4ஆவது இடத்திலும், தெலங்கானா 7.5 சதவீதத்துடன் 5ஆம் இடத்திலும் உள்ளன. கடந்த 11ஆம் தேதியுடன் முடிவடைந்த காலத்தில் இவ்வளவு தடுப்பூசி டோஸ்கள் வீணாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கேரளா, மேற்கு வங்கம், ஹிமாச்சல பிரதேசம், மிசோரம், கோவா, டாமன் & டையூ, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகளில் தடுப்பூசிகள் குறைந்த அளவில் வீணாக்கப்பட்டுள்ளன. இதனிடையே தடுப்பூசி மருந்து உற்பத்திக்காக சீரம் நிறுவனத்துக்கு ₹3,000 கோடியும், பாரத் பயோடெக் நிறுவனத்துக்கு ₹1,500 கோடியும் மத்திய அரசு வழங்கியுள்ளது.

---

**1. அண்டார்டிகாவுக்கு நாற்பதாவது அறிவியல் பயணத்தை மேற்கொண்ட அமைச்சகம் எது?**

அ) கப்பல் வாணிப அமைச்சகம்

**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**


இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

- ✓ மத்திய புவி அறிவியல் அமைச்சகம் அண்டார்டிகாவிற்கு நாற்பதாவது அறிவியல் பயணத்தை மேற்கொண்டது. இந்தப் பயணம், 2021 ஏப்.10 அன்று வெற்றிகரமாக கேப்டவுனுக்குத் திரும்பியுள்ளது.
- ✓ வெறும் 94 நாட்களில் சுமார் 12,000 கடல் மைல் நீள பயணத்தை முடித்த பின்னர் இந்தக் குழு திரும்பியது. MV வாசிலி கோலோவ்னின் கப்பலில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சாதனை, அண்டார்டிகாவில் இந்தியாவின் நாற்பதாண்டுகால அறிவியல்பூர்வ முன்னெடுப்புளை நிறைவு செய்துள்ளது.

---

**2. 'லூனா 25' என்பது நிலவு ஆராய்ச்சி குறித்த எந்த நாட்டு திட்டத்தின் பெயராகும்?**



**அ) ரஷியா ☑**

ஆ) ஜப்பான்

இ) சீனா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ நிலவு ஆராய்ச்சி குறித்த ஒரு புதிய தொடர் திட்டங்களை ரஷியா அறிவித்துள்ளது. "லூனா 25" எனப் பெயரிடப்பட்ட அந்த திட்டங்களில் முதலாவது திட்டம் வரும் அக்டோபரில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ 45 ஆண்டுகளாக ரஷியா இதுபோன்ற நிலவு ஆராய்ச்சி திட்டங்களில் ஈடுபடாமல் இருந்தது. நிலவின் மேற்பரப்பிற்குக்கீழே நிரந்தரமாக உறைந்திருக்கும் பனியை ஆராயும் விதமாக இந்தத் தரையிறங்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலவு சூழ் புழுதியின் கூர்மையான துண்டுகளால் ஏற்படும் இடர்களையும் அறிவியலாளர்கள் மதிப்பீடு செய்வார்கள்.

---

**3. "Complex Pasts: Diverse Futures" என்பது ஏப்ரல்.18 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**




அ) உலக கலாச்சார நாள்

**ஆ) உலக பாரம்பரிய நாள் ☑**

இ) உலக தொல்லியல் நாள்

ஈ) உலக சுற்றுலா நாள்

- ✓ ஆண்டுதோறும் ஏப்18 அன்று உலக பாரம்பரிய நாள் அல்லது நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரம்பரிய தலங்களுக்கான பன்னாட்டு நாளாக கொண்டாடப்படுகிறது. "Complex Pasts: Diverse Futures" என்பது இந்த ஆண்டு (2021), உலக பாரம்பரிய நாளுக்கான கருப்பொருளாகும்.
- ✓ இந்தியாவில், இராமாயணம்குறித்த முதல் ஆன்லைன் கண்காட்சியை சுற்றுலா & கலாச்சார அமைச்சர் தொடங்கினார். இந்தக் கண்காட்சியில், புது தில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தின் 49 சிற்றோவியங்கள் தொகுப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

---

**4. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற டேபிள் மவுண்டைன் தேசிய பூங்கா அமைந்துள்ள நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) தென்னாப்பிரிக்கா ☑**

இ) நியூசிலாந்து

ஈ) பிலிப்பைன்ஸ்

- ✓ தென்னாப்பிரிக்காவின் மேசை மலை தேசிய பூங்காவில் எரிந்து வரும் காட்டுத்தீ, கட்டடங்களை சேதப்படுத்தும் என்று கூறப்படுகிறது.
- ✓ இந்தத்தீயை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக சுமார் 200 தீயணைப்பு வீரர்களும் 4 உலங்கூர்திகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1796 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கேப்டவுன் பல்கலைக்கு அருகிலுள்ள மோஸ்டெர்ட்ஸ் மில் என்ற வரலாற்று கால காற்றாலையும் இந்தத் தீவிபத்தில் சேதமடைந்துள்ளது.

**5. குஜராத்தின் பனிதரில் இந்தியாவில் தனது முதல் மெகா உணவு பூங்கா திட்டத்தை தொடங்கியுள்ள நாடு எது?**



அ) பிரான்ஸ்

ஆ) இஸ்ரேல்

**இ) இத்தாலி ☑**

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

- ✓ அண்மையில், உணவு பதப்படுத்தும் வசதிகளை உள்ளடக்கிய தனது முதல் மெகா உணவு பூங்கா திட்டத்தை, இத்தாலி, இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. "தி மெகா புட் பார்க்" என்ற சோதனை அடிப்படையிலான இந்தத் திட்டம், மெய்நிகர் முறையில் தொடங்கப்பட்டது.
- ✓ மும்பையில் உள்ள ICE அலுவலகத்திற்கும் குஜராத்தின் பனிதர் மெகா உணவு பூங்காவிற்கும் இடையே ஒரு விருப்பகடிதம் கையெழுத்தானது.

---

**6. சாகச விளையாட்டு நிறுவனம் திறக்கப்பட்டுள்ள தேரி ஏரி உள்ள மாநிலம் எது?**



அ) மகாராஷ்டிரா

**ஆ) உத்தரகண்ட் ☑**

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

- ✓ தேரி ஏரியின் கரையில் நீர் விளையாட்டு மற்றும் சாகச நிறுவனத்தை உத்தரகண்ட் மாநில முதலமைச்சர் தீரத் சிங் ராவத் மற்றும் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோர் திறந்துவைத்தனர். இந்தோ–திபெத்திய எல்லைப்புற காவல்துறையால் நடத்தப்படு இந்த நிறுவனம், ₹20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

---

**7. எந்த நாட்டுடனான தனது மிகப்பெரிய இராணுவ கொள்முதல் ஒப்பந்தத்தில், அண்மையில், இஸ்ரேல் கையெழுத்திட்டது?**



அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) சீனா

இ) ஜெர்மனி

**ஈ) கிரேக்கம் ☑**

- ✓ இஸ்ரேலும் கிரேக்கமும் தங்களது மிகப்பெரிய பாதுகாப்பு கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இஸ்ரேலிய இராணுவ ஒப்பந்தக்காரரால் ஹெலெனிக் வான்படைக்கு (கிரேக்கம்) ஒரு பயிற்சி மையத்தை நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் 1.65 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஓர் ஒப்பந்தமும் இதிலடங்கும்.
- ✓ இந்த ஒப்பந்தம் நாடுகளுக்கு இடையிலான அரசியல் & பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருநாடுகளின் வான்படைகளும் ஒரு கூட்டுப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.

---

**8. அண்மையில் கூகிள் டூடுலில் இடம்பெற்ற வேரா கெட்ராய்ட்ஸ் என்பவர் எந்த நாட்டின் முதல் பெண் இராணுவ அறுவை சிகிச்சை நிபுணராவார்?**



அ) ஜெர்மனி

**ஆ) ரஷியா ☑**

இ) இத்தாலி

ஈ) பிரான்ஸ்

- ✓ ரஷிய அறுவை சிகிச்சை நிபுணர், பேராசிரியர், கவிஞர் மற்றும் எழுத்தாளருமான Dr வேரா கெட்ராய்ட்ஸின் 151ஆவது பிறந்தநாளை கூகிள் கொண்டாடியது. அவர், அந்நாட்டின் முதல் பெண் இராணுவ அறுவை சிகிச்சை நிபுணராகவும், உலகின் முதல் பெண் பேராசிரியர்களுள் ஒருவராகவும் கருதப்படுகிறார். கடந்த 1904'இல், ருஸ்ஸோ–ஜப்பானிய போரின்போது ஓர் அறுவை சிகிச்சை நிபுணராக டாக்டர் கெட்ராய்ட்ஸ் தாமாக முன்வந்து பணியாற்றினார்.

---

**9.** **மனித உடலில், திசு மட்டத்தில் போதுமான அளவு உயிர்வளி ($O_2$) பெறாத நிலைக்கு பெயர் என்ன?**



அ) மையாக்ஸியா

**ஆ) ஹைபாக்ஸியா ☑**

இ) ஹைபராக்ஸியா

ஈ) டைபாக்ஸியா

- ✓ ஹைபாக்ஸியா என்பது மனித உடலில், திசு மட்டத்தில் போதுமான அளவு உயிர்வளி பெறாத ஒரு நிலையாகும். வைரஸ் தொற்று காரணமா–க COVID–19 நோயாளிக்கு இந்த நிலை மீண்டும் மீண்டும் வருகிறது.
- ✓ கொரோனா வைரஸ் பாதிப்புகள் அதிகரிப்பதால் நாட்டில் உயிர்வளி உருளைகளின் பெரும் பற்றாக்குறைக்கு மத்தியில், இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) $SpO_2$ (குருதி உயிர்வளி செறிவு) கூடுதல் உயிர்வளி வழங்கல் முறையை உருவாக்கியுள்ளது. இது, ஒரு நபரை, ஹைபாக்ஸியா நிலைக்கு ஆளாகாமல் காப்பாற்றுகிறது.

---

**10.** **'கடல் சூழலுக்குள் நுழையும் நெகிழியை எதிர்த்து நகரங்கள்' குறித்த எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**




அ) பின்லாந்து

**ஆ) ஜெர்மனி ☑**

இ) சுவிச்சர்லாந்து

ஈ) பிரான்ஸ்

- ✓ இந்திய அரசின் வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமும் ஜெர்மானிய சுற்றுச்சூழல், இயற்கை பாதுகாப்பு மற்றும் அணுவாற்றல் அமைச்சகத்தின் சார்பாக GIZ GmbH இந்தியாவும் தொழில்நுட்ப ஒத்து–ழைப்பு தொடர்பான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ✓ இத்திட்டத்தின் விளைவுகள் நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கத்தின் நோக்கங்களான நீடித்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் 2022'க்குள் ஒற்றை பயன்பாட்டு நெகிழியை ஒழிப்பதற்கான இலக்கு ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மே 1 முதல் இலவச தடுப்பூசி முகாம்: தமிழ்நாடு அரசு**

மே 1 முதல் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இலவசமாக கரோனா தடுப்பூசி போடப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் வழிகாட்–டுதலின்படி, தமிழ்நாட்டில் 2020 மார்ச் 25 முதல் தேசிய பேரிடர் மேலா–ண்மைச் சட்டத்தின்கீழ், ஊரடங்கு உத்தரவு பல்வேறு கட்டுப்பாடுகளுட–னும், தளர்வுகளுடனும் அமலில் இருந்துவருகிறது.

---

**2. குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 5 தங்கம்**

போலந்தில் நடைபெறும் இளையோர் உலக குத்துச்சண்டை போட்டியில் இந்திய மகளிர் 4 பேர் தங்கப்பதக்கம் வென்றனர். இறுதிச்சுற்றுகளில், 48 கிலோ பிரிவில் கீதிகா – போலாந்தின் நடாலியா குஷெவ்ஸ்காவை 5–0 என்ற கணக்கில் வென்றார். 51 கிலோ பிரிவில் பேபிரோஜிசனா சானு – ரஷியாவின் வாலெரியா லின்கோவாவை அதே புள்ளிகள் கணக்கில் தோ–ற்கடித்தார். 57 கிலோ பிரிவில் பூனம் 5–0 என்ற கணக்கில் பிரான்ஸின் ஸ்தெலின் கிராசியையும், 60 கிலோ பிரிவில் வின்கா – கஜகஸ்தானின் ஜுல்டைஸ் ஷயாக்மீடோவாவையும் வீழ்த்தினர். இப்போட்டியில் இன்னும் 3 மகளிரும், ஓர் ஆடவரும் இறுதிச்சுற்றில் விளையாட உள்ளனர்.

---

**1. சுவையூட்டப்பட்ட நறுமணப்பால் தயாரிப்புகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியின்கீழ் 12 சதவீத வரி விதிக்கப்படும் என்று சமீபத்தில் தீர்ப்பளித்த ஆணையம் எது?**



அ) நிதி அமைச்சகம்

**ஆ) மேம்பட்ட ஆளும் ஆணையம் (AAR) ☑**

இ) நிதி ஆணையம்

ஈ) மத்திய மறைமுக வரிகள் வாரியம்

✓ சுவையூட்டப்பட்ட நறுமணப்பால் தயாரிப்புகளுக்கு சரக்கு & சேவை வரியின்கீழ் 12% வரி விதிக்கப்படும் என்று குஜராத் மாநிலத்தின் GST வழக்குகளை விசாரிக்கும் AAR ஆணையம் தெரிவித்துள்ளது. அமுல் பிராண்டின்கீழ் பால் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு நிறுவனம், அமுல் கூல்/அமுல் கூல் கபே என்ற பெயரில் விற்பனை செய்யும் நறுமண பாலுக்கு GST வரி விதிப்பது குறித்து AAR ஆணையத்தை அணுகியது.

---

**2. பின்வரும் எந்த நாடு யுரேனியத்தை 60% வரை செறிவூட்ட தொடங்கியுள்ளது என்பதை பன்னாட்டு அணுவாற்றல் முகமை உறு–திப்படுத்தியுள்ளது?**

அ) இஸ்ரேல்

**ஆ) ஈரான் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நைஜீரியா

✓ ஈரான் 60 சதவீதம் வரை யுரேனியம் செறிவூட்டலை தொடங்கிவிட்டது என பன்னாட்டு அணுவாற்றல் முகமை உறுதிசெய்துள்ளது. இதுவே அதிகபட்ச செறிவூட்டல் நிலையாகும். அண்மையில் நடந்த சம்பவத்தால் நடான்சில் உள்ள மின்விநியோக வலையமைப்பு சேதப்படுத்தப்பட்டதை அடுத்து, யுரேனியம் செறிவூட்டலை உயர்த்துவதற்கும், நவீனமயமாக்கப்–பட்ட மையவிலக்கிகளை நடான்ஸ் அணுவாற்றல் நிலையத்தில் நிறு–வுவதற்கும் ஈரான் முடிவுசெய்துள்ளது.

---

**3. பாதுகாப்பு குறித்து, அண்மையில் பணியமர்த்தப்பட்ட "INAS 323" என்றால் என்ன?**



அ) ஆளில்லா வானூர்தி

**ஆ) வான்படையணி ☑**

இ) நீர்மூழ்கிக்கப்பல்

ஈ) ஏவுகணை துவக்கி

✓ இந்திய கடற்படையின் உள்நாட்டில் கட்டப்பட்ட நவீன இலகு இரக உலங்கு வானூர்தி Mk III, இந்திய கடற்படையின் INAS 323 வான்படை அணி ஆகியவை கோவாவின் INS ஹன்சாவிலிருந்து பணியில் சேர்க்க–ப்பட்டன. நவீன இலகு இரக உலங்கு வானூர்தியான Mk III, தேடல் & மீட்பு, சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் கடலோர கண்காணிப்புக்கு ஆகிய–வற்றுக்கு பயன்படுத்தப்படும்.

✓ இப்படையணி, மூன்று நவீன இலகு ரக Mk III உலங்கு வானூர்திகளை இயக்கும், சக்தி எந்திரத்துடன்கூடிய இந்த உலங்கு வானூர்தியை, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

---

**4. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சிவசுப்பிரமணியன் ராமன், கீழ்காணும் எந்த அமைப்பின் தலைவர் & நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்றார்?**



அ) SEBI

**ஆ) SIDBI ☑**

இ) ISRO

ஈ) DRDO

✓ சிவசுப்பிரமணியன் ராமன் SIDBI வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்றுள்ளதாக சிறு தொழிந்துறை மேம்பாட்டு வங்கி (SIDBI) அறிவித்தது. மூன்றாண்டு காலத்துக்கு அவர் இப்பதவியை வகிப்பார். இந்த நியமனத்திற்கு முன்பு, ராமன், தேசிய மின்னாளுகை சேவைகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SBI) நிர்வாக இயக்குநர் பதவியையும் வகித்துள்ளார்.

---

**5. ஆண்டுதோறும் ஏப்ரல்.19 அன்று கொண்டாடப்படும் ஒரு சிறப்பு நாளோடு தொடர்புடைய மனித உடலின் இரண்டாவது மிகப்பெரிய உறுப்பு எது?**



அ) தோல்

**ஆ) கல்லீரல் ☑**

இ) நுரையீரல்

ஈ) மூளை

✓ கல்லீரல் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக உலக கல்லீரல் நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.19 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. கல்லீரல், மனிதவுடலின் இரண்டாவது பெரிய உறுப்பு மற்றும் செரிமான அமைப்பின் ஒரு முக்கிய பகுதியாகும்.

✓ இது தோலுக்கடுத்து இரண்டாவது மிகப்பெரிய உறுப்பாகும். 2018ஆம் ஆண்டில், சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் தேசிய நச்சுயிரியால் கல்லீரல் அழற்சி நோய் கட்டுப்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது இந்தியாவில் நச்சுயிரியால் கல்லீரல் அழற்சி நோயைத் தடுப்பதை–யும் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, "புளூ நேச்சர் அலையன்ஸ்" என்பதுடன் தொடர்புடையது எது?**

அ) விண்வெளி பாதுகாப்பு

**ஆ) பெருங்கடல் பாதுகாப்பு ☑**

இ) வேளாண் பாதுகாப்பு

ஈ) மயில்கள் பாதுகாப்பு

✓ அடுத்த ஐந்து ஆண்டுகளில், 18 மில்லியன் சதுர கிமீட்டர் பெருங்கடல் பரப்பைப் பாதுகாப்பதற்காக ஒரு புத்தம் புதிய உலகளாவிய கடல்சார் முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு, "புளூ நேச்சர் அலையன்ஸ்" என்று அழைக்கப்படுகிறது. இது தேசிய அரசாங்கங்கள், உள்ளூர் சமூகங்கள், பழங்குடி மக்கள், அறிவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களால் வழிநடத்தப்படுகிறது.

---

**7. உலக பத்திரிகை சுதந்திர குறியீடு – 2021'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ) 142 ☑**

ஆ) 152

இ) 162

ஈ) 172

142

✓ 'எல்லைகளற்ற நிருபர்கள்' என்ற அமைப்பு வெளியிட்டுள்ள உலக பத்தி–ரிகை சுதந்திர குறியீட்டில், இந்தியா, 142ஆவது இடத்தை இந்தாண்டும் தக்கவைத்து மோசமான நிலையில் தொடர்வதாக கூறப்பட்டுள்ளது.

✓ பத்திரிகை சுதந்திரம்பற்றி வெளியிடப்பட்ட 180 நாடுகள்கொண்ட இந்தப் பட்டியலில் நார்வே முதலிடத்தில் உள்ளது. அதனைத்தொடர்ந்து பின்லா–ந்து, டென்மார்க் ஆகியவை 2 மற்றும் 3ஆம் இடங்கள் பிடித்துள்ளன. பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடாக இந்தியா உள்ளது என அக்குறியீடு தெரிவித்துள்ளது.

---

**8. ஐக்கியப்பேரரசால் வெளியடப்படும் புதிய டிஜிட்டல் நாணயத்தின் பெயர் என்ன?**



அ) UK நாணயம்

**ஆ) பிரிட்காயின் ☑**

இ) டிஜி பிரிட்

ஈ) பிரிட் நாணயம்

✓ ஐக்கியப்பேரரசு (UK) ஒரு புதிய டிஜிட்டல் நாணயத்தை உருவாக்குவதற்–கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. இது, "பிரிட்காயின்" என்று அழைக்கப்படுகிறது. மத்திய வங்கியின் இந்த டிஜிட்டல் நாணயம் குறித்த நன்மைகளை மதிப்பிடுவதற்காக, இங்கிலாந்து வங்கியும் கருவூ–லமும் இணைந்து செயல்படவுள்ளன.

- ✓ வீட்டுச் செலவுகள் மற்றும் வணிகங்களின் பயன்பாட்டிற்கான டிஜிட்டல் நாணயத்தின் புதிய வடிவமாக இந்தப் புதிய நாணயம் இருக்கும் என அவ்வங்கி கூறியுள்ளது.

---

**9. அண்மையில் காலமான இட்ரிஸ் டெபி இட்னோ, முப்பதாண்டுக –ளுக்கும் மேலாக, பின்வரும் எந்த மத்திய ஆப்பிரிக்க தேசத்தின் ஆட்சியாளராக இருந்தார்?**



அ) சூடான்

**ஆ) சாட் ☑**

இ) எகிப்து

ஈ) நைஜீரியா

- ✓ மத்திய ஆப்பிரிக்க தேசமான சாட் நாட்டை முப்பதாண்டுகளுக்கும் மே –லாக ஆட்சிபுரிந்த சதிபர் இட்ரிஸ் டெபி இட்னோ, அண்மையில் கிளர்ச்சி –யாளர்களுடனான போரின்போது இறந்தார். அவர் மரணிப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாக, ஏப்.11 அன்று அதிபர் தேர்தலில் டெபி வெற்றிபெற்றதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

---

**10. பிரதமர் கரிப் கல்யாண் தொகுப்பின்கீழ் நலவாழ்வுப் பணியாள –ர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை எவ்வளவு?**




அ) ₹5 இலட்சம்

ஆ) ₹10 இலட்சம்

இ) ₹25 இலட்சம்

**ஈ) ₹50 இலட்சம் ☑**

- ✓ பிரதமர் கரிப் கல்யாண் தொகுப்பின்கீழ், சுகாதாரப் பணியாளர்களுக்கா –ன காப்பீட்டுத்திட்டத்தை இந்திய அரசு ஓராண்டுகாலத்திற்கு நீட்டித்து –ள்ளது. COVID–19 காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டாலோ அல்லது COVID–19 தொடர்பான பணியின் காரணமாக தற்செயலாக உயிரிழப்பு ஏற்பட்டாலோ இந்தக் காப்பீட்டுத் திட்டம் பொருந்தும். காப்பீடு செய்யப்பட்ட நபரின் உரிமைகோருபவருக்கு ₹50 இலட்சம் வழங்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. COVID சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்து: அவசரகால பயன்பாட்டுக்கு DGCI அனுமதி**

COVID நோயாளிகளின் அவசரகால சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்தை பயன்படுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (DGCI) அனுமதியளித்தது. கரோனா தொற்றால் மிதமாக பாதிக்கப்பட்டுள்ள நோ –யாளிகளின் சிகிச்சைக்கு அந்த மருந்தை அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு –ள்ளது. இந்திய மருந்து உற்பத்தி நிறுவனமான ஸைடஸ் கடிலா இந்த ஊசிமருந்தை உற்பத்தி செய்கிறது. நாட்டில் கரோனா தொற்றின் 2ஆவது அலை தீவிரமாகியுள்ளது. இந்நிலையில் அவசரகால பயன்பாட்டுக்கு 'விரஃபின்' மருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. உயர்கல்வி விருப்பப் பாடப்பிரிவில் NCC இணைப்பு: UGC தகவல்**

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான விருப்பப் பாடப்பிரிவில் தேசிய மாணவர் படை (NCC) சேர்க்கப்பட்டுள்ளதாக UGC தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் தேசப்பற்று மற்றும் ஒற்றுமை உணர்வுகளை வளர்க்கும் விதமாக 'தேசிய மாணவர் படை' இளம் வயதுகளிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ராணுவம், காவல்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

---

**3. யூ–டியூப் வழியே குடிமைப்பணித் தேர்வு பயிற்சி: தமிழக அரசு அறிவிப்பு**

சமூக ஊடகமான யூ–டியூப் வழியே குடிமைப் பணித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்று அண்ணா மேலாண்மை நிலையம் அறிவி –த்துள்ளது. இதுகுறித்து, அந்த நிலையத்தின் இயக்குநர் வெ இறையன்பு வெளியிட்ட அறிவிப்பு: கரோனா இரண்டாவது அலை பரவலைக் கருத்தில் கொண்டு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நேர்முகமாக நடைபெறும் அனைத்து வகையான பயிற்சிகளும் நிறுத்தி வைக்கப்பட்டு –ள்ளன. இந்தத் தடை காரணமாக பயிற்சி நிலையத்தில் பயின்று வந்த மாணவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, சமூக ஊடகமான யூ–டியூப் வழியே குடிமைப்பணித் தேர்வுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும். யூ–டியூப் குறியீடுகள் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் சார்பில் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் வழியே குடிமைப் பணித் தேர்வு மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும். தேர்வுக்குரிய காணொளிகள் அதில் பதிவேற்றப்படும். மேலும், அரசு ஊழியர்களுக்கான மேலாண்மை பயிற்சியும் அதன் வழியே அளிக்கப்படும்.

---

**4. கோடை காலப் பயிர்கள் சாகுபடி பரப்பளவு 21.50 சதவீதம் அதிகரிப்பு! பருப்பு வகை சாகுபடியில் தமிழ்நாடு முன்னிலை**

நாட்டில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடி பரப்பளவு 21.5% அதிகரித்துள்ளது என்று மத்திய வேளாண், உழவர்கள் நலத்துறை தெரிவித்துள்ளது. இதில், அதிக அளவில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யும் மாநிலங்களில் தமிழகம் முன்னிலையில் உள்ளது என்றும் வேளாண்துறை தெரிவித்துள்ளது.

கரோனா தொற்றையொட்டி நாட்டின் வளர்ச்சி விகிதம் பல்வேறு துறைகளில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், வேளாண் துறை வளர்ச்சியில் பின்னடைவு ஏதும் ஏற்படவில்லை. விவசாயிகளின் கடின உழைப்போடு மத்திய – மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளால் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கோடைகாலப்பயிர்கள் சாகுபடிப் பரப்பளவு அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**இது தொடர்பாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை கூறியுள்ளதாவது:** நாட்டில் கோடைகாலப்பயிர்களான பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய் வித்துகள் போன்றவற்றை அறிவியல் ரீதியாக சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய வேளாண்துறை எடுத்தது. இதன் விளைவாக ஏப்.23ஆம் தேதி வரையில் நாட்டில் 73.76 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடி செய்யப்ப –ட்டுள்ளன. இது சுமார் 21.5 சதவீதம் அதிகமாகும். கடந்த ஆண்டு இது 60.67 இலட்சம் ஹெக்டேராக இருந்தது.

**பருப்பு வகைகள்:** இதில், பருப்பு வகைகள் சாகுபடிப் பரப்பு இரு மடங்காக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் சுமார் 6.45 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இது இந்த ஆண்டு 12.75 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. தமிழகம் 2.12 லட்சம் ஹெக்டேருக்கு மேலாக பருப்பு வகைகளை சாகுபடி செய்து முன்னனி மாநிலமாக திகழ்கிறது. மேலும், மத்திய பிரதேசம், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், குஜராத் உள்பட 8 மாநிலங்களில் அதிக அளவில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

**எண்ணெய் வித்துகள்:** நாட்டில் எண்ணெய் வித்துகள் சாகுபடி 9.03 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 10.45 இலட்சம் ஹெக்டேராக (16 சதவீதம்) அதிகரித்துள்ளது. இதில் முன்னிலை பட்டியலில் உள்ள 8 மாநிலங்களில் தமிழகம் ஆறாவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 33.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது இந்த ஆண்டு 39.10 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. குறுவை நெல் சாகுபடியில் மேற்கு வங்கம், தெலங்கானா, கர்நாடகம் ஆகியவை முன்னிலையில் உள்ளது. இந்த வகையில் தமிழகம் ஏழாவது இடத்தில் உள்ளது.

கோடைகாலப்பயிர்கள் சாகுபடி பரப்பளவு அதிகரிப்பால் கூடுதல் வருவாயு –ம், வேலைவாய்ப்புகளும் கிடைக்கின்றன. மேலும், விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடிக்கான பயிற்சிக –ளும் அளிக்கப்படுகின்றன. இந்தப்பயிற்சி ஜனவரி மாதம் நடைபெறுகிறது.

பயிர்சாகுடி பரப்பளவு அதிரிக்கப்படுவதால், உணவு தானியங்களின் கூடுத –ல் தேவையும், கால்நடைகளுக்கான உணவுத்தேவையும் பூர்த்தி செய்ய –ப்படுகின்றன. பயிர் சாகுபடியில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவதற் –கும் விவசாயிகளுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றும் மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**ஏற்றுமதி அதிகரிப்பு**

நாட்டில் தற்போது நிலவும் நோய்த்தொற்று காலகட்டத்தில், வேளாண் பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. 2020 ஏப்ரல் முதல் 2021 பிப்ரவரி வரையிலான காலத்தில் ₹2.74 லட்ச கோடியளவுக்கு வேளாண் மற்றும் வேளாண்சார்ந்த பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டில் வேளாண் பொருள்கள் ஏற்றுமதி ₹2.31 லட்ச கோடியாக இருந்தது. கோதுமை, தானியங்கள், அரிசி, சோயா, சர்க்கரை, பருத்தி போ –ன்றவை ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் முக்கியமானவையாகும். 2020–21'இல் கோதுமை ₹3,283 கோடி, தானிய வகைகள் ₹4,542 கோடி, அரிசி ₹30,277 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு 50,000 மெட்ரிக் டன், லெபனானுக்கு 40,000 மெட்ரிக் டன் கோதுமையை NABARD நிறுவனம் ஏற்றுமதி செய்தது என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது.

---

**5. NASAஉடன் இணைந்து 4 விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்பும் ஸ்பேஸ் X**

அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்து உள்ளன. அங்கு அமெரிக்கா மற்றும் ரஷியாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

6 மாதத்துக்கு ஒருமுறை என்கிற வகையில் சுழற்சிமுறையில் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்புவதற்காக அமெரிக்காவின் அரசு விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, ஸ்பேஸ் X என்னும் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்காக ஸ்பேஸ் X நிறுவனம் குரூ டிராகன் விண்கலத்துடன் கூடிய பால்கன் 9 இரக ஏவுகலத்தை தயாரித்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் 2 வீரர்களும், நவம்பர் மாதம் 4 வீரர்களும் ஸ்பேஸ் X ஏவுகலம்மூலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் சென்றனர். நாசாவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும் இணைந்து மூன்றாவது முறையாக விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பவுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற தாமஸ் பெஸ்கெட், மேகன் மெக் ஆர்தர், NASA காமண்டர் ஷேன் கிம்பரோ மற்றும் ஜப்பானை சேர்ந்த விண்வெளி வீரரான அகிஹிகோ ஹோஷைட் ஆகிய 4 பேரும் ஏப்.22ஆம் தேதி புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து ஏவப்படும் பால்கன் 9 ஏவுகலத்தில் பறக்கவுள்ளனர். இவர்கள் ஆறுமாதகாலம் அங்கிருந்து ஆய்வுகளை மேற்கொள்வர்.

---

**1. "மரண தண்டனை குறித்த உலகளாவிய ஆய்வு" அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) ILO

**ஆ) பன்னாட்டு மன்னிப்பு அவை ☑**

இ) NHRC

ஈ) பன்னாட்டு நீதிமன்றம்

✓ பன்னாட்டு மன்னிப்பு அவை தனது வருடாந்திர அறிக்கையான "மரண தண்டனை குறித்த உலகளாவிய ஆய்வு" என்பதை வெளியிட்டுள்ளது.

✓ இந்த அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் உலகளாவிய மரண தண்டனைகளின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்தமாக சரிவு காணப்படுகிறது. ஆனால் சில நாடுகள் மரணதண்டனைகளை அதிகரித்துள்ளன. இந்த அறிக்கையின்படி, சீனா, உலகில் அதிகம் மரணதண்டனை விதிக்கும் நாடாக கருதப்படுகிறது.

---

**2. தொடங்கிடு இந்தியா விதை நிதியத்துக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?**

அ) ₹145 கோடி

ஆ) ₹500 கோடி

**இ) ₹945 கோடி ☑**

ஈ) ₹2000 கோடி

✓ தொடங்கிடு இந்தியா விதை நிதியத்தை மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். இந்த நிதியத்துக்காக ₹945 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இதன்மூலம், நாட்டில், 3600'க்கும் மேற்பட்ட துளிர் நிறுவனங்களுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இது, அடுக்கு-2 மற்றும் 3 நகரங்களில் துளிர் நிறுவன சூழலமைப்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3. ஜெகனண்ணா வித்யா தீவேனா திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?**

அ) தெலங்கானா



**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ ஆந்திர பிரதேச மாநில அரசு ஜெகனண்ணா வித்யா தீவேனா திட்டம் என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ், மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர நிதியுதவி வழங்கப்படுகிறது. அண்மையில், அம்மாநில முதலமைச்சர் YS ஜெகன் மோகன் ரெட்டி, 10.88 இலட்சம் தாய்மார்களின் வங்கிக் கணக்குகளுக்கு, இந்தத் திட்டத்தின்கீழ் முதல் தவணை கல்வி கட்டணத்தை வைப்பு வைத்தார்.

---

**4. பன்னாட்டு எரிசக்தி முகமையின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் எது?**

அ) வாஷிங்டன்

ஆ) ஜெனீவா

**இ) பாரிஸ் ☑**

ஈ) புது தில்லி

✓ பிரான்ஸின் பாரிஸை தலைமையிடமாகக்கொண்ட பன்னாட்டு எரிசக்தி முகமை, அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டது. அது, உலகெங்கிலும் எரிசக்தி தொடர்பான கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு, 2021ஆம் ஆண்டில் சுமார் 1.5 பில்லியன் டன் அளவிற்கு உயர்ந்துள்ளதாக கூறுகிறது. 2010ஆம் ஆண்டிற்குப்பிறகு கரியமிலவாயு உமிழ்வின் மிகப்பெரிய அதிகரிப்பாக இது கருதப்படுகிறது.

---

**5. இந்தியாவின் முதல் 'ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ்', எந்த மாநிலத்திற்கு ஆக்ஸிஜனைக் கொண்டுசென்றது?**



அ) உத்தர பிரதேசம் **ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) அஸ்ஸாம் ஈ) ஹரியானா

✓ நாட்டின் முதல் 'ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ்', மகாராஷ்டிரா மாநிலத்திற்கு ஆக்ஸிஜனை வழங்குவதற்காக ஆந்திர மாநிலத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. COVID தொற்றுநோயால் மகாராஷ்டிர மாநிலத்தில் திடீரென ஆக்ஸிஜன் தேவை அதிகரித்ததை தொடர்ந்து மத்திய இரயில்வேயால் இயக்கப்படும் Ro-Ro (roll-on, roll-off) சேவை, விசாகப்பட்டினம் எஃகு ஆலையிலிருந்து ஆக்ஸிஜனை எடுத்துச்சென்றது.

---

**6. "2020ஆம் ஆண்டில் உலகளாவிய காலநிலையின் நிலை" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ) உலக வங்கி

ஆ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

**ஈ) ஐக்கிய நாடுகள் அவை ☑**

✓ ஐநா அவை, கடந்த 2020ஆம் ஆண்டிற்கான உலகளாவிய காலநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்தியா-வங்கதேசம் எல்லையில் நிலச்சரிவை ஏற்படுத்திய ஆம்பன் சூறாவளி, வட இந்தியப் பெருங்கடலில் பதிவான மதிப்புமிக்க வெப்பமண்டல சூறாவளி என்று அவ்வறிக்கை கூறியுள்ளது. இது பாதிக்கப்பட்ட நாடுகளில் 14 பில்லியன் டாலர் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

---

**7. உலக பொருளாதார மன்றத்தின் உலகளாவிய 'ஆற்றல் மாற்றம் குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ) 74 ☑**

ஆ) 84

இ) 94

ஈ) 104

✓ உலக பொருளாதார மன்றம் சமீபத்தில் உலகளாவிய 'ஆற்றல் மாற்றம் குறியீட்டை' வெளியிட்டது. நாடுகளின் எரிசக்தி அமைப்புகளின் தற்போதைய செயல்திறன் மற்றும் பாதுகாப்பான மற்றும் நிலையான எரிசக்தி அமைப்புகளுக்கு மாறுவதற்கான அவற்றின் தயார்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக்குறியீடு 115 பொருளாதாரங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. முந்தைய ஆண்டைவிட இந்தியா இரு இடங்கள் முன்னேறி 74ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், அனைத்து முக்கிய அளவுருக்களிலும் இந்தியா முன்னேறியுள்ளது.

✓ ஆற்றல் மாற்றம் குறியீட்டில் தொடர்ச்சியாக 3ஆவது ஆண்டாக சுவீடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் சுவிச்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, FACT கிளர்ச்சிக் குழுவுடன் தொடர்புடைய நாடு எது?**

அ) சூடான்



**ஆ) சாட் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நைஜீரியா

✓ FACT கிளர்ச்சிக் குழுவானது 2016ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதிபர் இட்ரிஸ் டெபியை பதவியிலிருந்து தூக்கியெறியும் நோக்கத்துடன் இந்தக்குழு சமீபத்தில் சாட் நகருக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது. டெபி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒருநாள் கழித்து, கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரின்போது ஏற்பட்ட காயங்களால் டெபி இறந்துவிட்டதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்தது.

---

**9. 'காஸ்மிக் ரோஸ்' வடிவத்திலான அளவளாவும் விண்மீன் திரள் 'Arp 273'இன் படத்தை வெளியிட்ட விண்வெளி நிறுவனம் எது?**

அ) ISRO



ஆ) JAXA

இ) ROSCOSMOS

**ஈ) NASA ☑**

✓ அண்மையில் NASA, 'காஸ்மிக் ரோஸ்' வடிவத்திலான அளவளாவும் விண்மீன் திரளான 'Arp 273'இன் நிழற்படத்தை வெளியிட்டுள்ளது.

✓ இந்த நிழற்படம், NASA'இன் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளது. இந்த நிழற் படத்தில், சுருள் வடிவ விண்மீன் திரள்களின் குழு, ரோஜாவை ஒத்த வடிவத்தை உருவாக்குகிறது. விண்மீன் திரள்களாலான இந்த அமைப்பு ஆண்ட்ரோமெடா பேரடையிலிருந்து சுமார் 300 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

---

**10.** **நடப்பாண்டு (2021) புவி நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Covid and Climate Change

**ஆ) Restore Our Earth ☑**

இ) One Earth

ஈ) Earth is our asset




✓ ஏப்.22 அன்று உலகம் முழுவதும் புவி நாள் அனுசரிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஆதரவாக உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு பன்னாட்டு நிகழ்வாகும் இந்தச் சிறப்பு நாள். நடப்பாண்டு (2021) வரும் இந்நாள், இந்நாளின் 51ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

✓ "Restore Our Earth" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். ஐநா அவை ஏப்ரல்.22'ஐ 'சர்வதேச தாய்பூமி நாள்' என்று அறிவித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாநில மொழிகளில் புதிய கல்விக் கொள்கை: தமிழ் புறக்கணிப்பு**

தேசிய கல்விக்கொள்கையின் உள்ளூர் மொழிகளுக்கான மொழிபெயர்ப்பை 17 மொழிகளில் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழ்மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை. தேசிய கல்விக்கொள்கை 1968ஆம் ஆண்டு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 42ஆவது திருத்தத்தின்படி கல்வி பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதையடுத்து 1986, 1992ஆம் ஆண்டுகளில் கல்விக்கொள்கை திருத்தப்பட்டது.

அதன்பின்னர் கடந்த 2016ஆம் ஆண்டில் TSR சுப்பிரமணியன் குழு கல்விக் கொள்கையில் சில திருத்தங்கள் செய்து தாக்கல் செய்தது. இதற்கிடையே 2019ஆம் ஆண்டு கஸ்தூரி ரங்கன் கல்விக் குழு தாக்கல் செய்த கல்விக் கொள்கையை அடிப்படையாக வைத்து கடந்த 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை, கடந்த ஆண்டு ஜூலை 29ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இது தற்போது நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய கல்விக்கொள்கையின்படி 10+2 என்ற பள்ளிப்பாடமுறை மாற்றப்பட்டு, 5+3+3+4 என்ற அடிப்படையில் 3 முதல் 8 வயது, 8 முதல் 11 வயது, 11 முதல் 14 வயது, மற்றும் 14–18 வயது ஆகிய மாணவர்களுக்காக பாடமுறை மாற்றப்படும். மாணவர்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரையில், தாய்மொழி, உள்ளூர் மொழி, பிராந்திய மொழி, பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு பொதுவான நுழைவுத்தேர்வு நடத்தப்படும். மாணவர்களின் பள்ளிப் பாடங்கள் அளவு குறைக்கப்படும். ஆறாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் மட்டுமே தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட்டது. இதற்கான பிராந்திய மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்த நிலையில், தற்போது 17 பிராந்திய மொழிகளில் கல்விக்கொள்கை மொழிபெயர்ப்பு வெளியாகியுள்ளது. கன்னடம், மலையாளம், தெலுங்கு, கொங்கணி, குஜராத்தி, காஷ்மீரி, நேபாளி, ஒடியா, அசாமி, பெங்காலி, போடோ, மராத்தி, பஞ்சாபி, டோக்ரி, மைதிலி, மணிப்புரி, சந்தாலி ஆகிய 17 மொழிகளில் தேசிய கல்விக்கொள்கை மொழிபெயர்க்கப்பட்டு – 2020 என்ற இணையதளத்தில் வெளியாகியுள்ளது. எனினும் இதில் தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை.

புதிய தேசிய கல்விக்கொள்கையை அமல்படுத்த தமிழகத்தில் கடுமையான எதிர்ப்புகள் இருந்துவரும் சூழலில் தற்போது அதன் மொழிபெயர்ப்பில் கூட தமிழ்மொழி இடம்பெறாதது சர்ச்சையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதற்கு தமிழ் ஆர்வலா'கள், கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மத்திய கல்வி அமைச்சகம் உரிய நடவடிக்கை எடுத்து தமிழ் மொழியிலும் தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

**2. உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக NV ரமணா பதவியேற்பு**

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக N V ரமணா பொறுப்பேற்றுக் கொண்டார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த போப்டேவின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், N V ரமணா பொறுப்பேற்றார்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ரமணா, ஆந்திர உயர்நீதிமன்றம், மத்திய மற்றும் மாநில நிர்வாக தீர்ப்பாயங்களில் பணியாற்றியுள்ளார். மேலும், கடந்த 2000ஆம் ஆண்டில் ஆந்திர உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இவருக்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். அடுத்தாண்டு ஆக.26 வரை ரமணா உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்படுவார்.

---

**3. கரோனா தடுப்பூசி, ஆக்சிஜனுக்கு சுங்க வரி விலக்கு: மத்திய அரசு**

நாட்டில் கரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், கரோனா தடுப்பூசி, மருத்துவ ஆக்சிஜன் மற்றும் கரோனா சிகிச்சை தொடர்பான உபகரணங்களுக்கு சுங்க வரி விதிப்பிலிருந்து மத்திய அரசு விலக்களித்தது. நாட்டில் ஆக்சிஜன் கையிருப்பை அதிகரிப்பது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து அரசு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:** அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஆக்சிஜன் மற்றும் ஆக்சிஜன் தொடர்பான உபகரணங்களுக்கு மும்மாத காலத்துக்கு அடிப்படை சுங்க வரி மற்றும் சுகாதார வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பது என பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல, இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிக்கான சுங்க வரியையும் மும்மாத காலத்துக்கு ரத்து செய்வது என்று முடிவெடுக்கப்பட்டு, அந்த நடைமுறையும் உடனடியாக அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மீட்டருடன் கூடிய ஆக்சிஜன் செலுத்தும் கருவி, டியூப் மற்றும் இணைப்பு உபகரணங்கள், ஆக்சிஜன் குப்பி, வாயு நிரப்பும் உபகரணம், சேமிப்பு டேங்குகள், சிலிண்டர்கள், கிரையோஜெனிக் சிலிண்டர் மற்றும் டேங்குகள் உள்பட ஆக்சிஜன் தொடர்பான 16 உபகரணங்களுக்கு சுங்க வரி மற்றும் சுகாதார வரி விதிப்பில் இருந்து 3 மாதங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் செயற்கை சுவாசக் கருவி (வென்டிலேட்டர்) மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற உபகரணங்களுக்கு இறக்குமதி வரி மற்றும் சுகாதார வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் தடுப்பூசிகளுக்கு தற்போது 10% சுங்க வரி அல்லது இறக்குமதி வரியை மத்திய அரசு விதித்து வருகிறது. வரும் மே.1 தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்படவுள்ள நிலையில், மத்திய அரசு அறிவித்திருக்கும் இந்த வரி விலக்கு வெளிநாட்டு தடுப்பூசிகள் குறைந்த விலையில் கிடைப்பதையும் தட்டுப்பாடின்றி தடுப்பூசி கிடைப்பதையும் உறுதிப்படுத்தும்.

அண்மையில், மத்திய அரசு அவசர கால பயன்பாட்டுக்கு அனுமதி அளித்த ரஷியாவின் ஸ்புட்னிக்–வி தடுப்பூசிகள் இம்மாத இறுதியில் அல்லது அடுத்தமாதம் இந்தியா வந்தடையவுள்ளன. அதுபோல மாடர்னா, ஜான்சன் & ஜான்சன் உள்ளிட்ட தடுப்பூசி நிறுவனங்களும் அவற்றின் கரோனா தடுப்பூசிகளை இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதிக்க கோரிக்கை விடுத்துள்ளன. இத்தகையச் சூழலில் மத்திய அரசு இந்த வரி விலக்கை அறிவித்திருக்கிறது.

முன்னதாக, கரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைக்கு அத்தியாவசியமான ரெம்டெசிவிர் மருந்துக்கு இறக்குமதி வரி விலக்கை மத்திய அரசு அளித்தது. அந்த மருந்து ஏற்றுமதிக்கும் தடை விதித்தது.

---

**4. இந்தியா–ஸ்வீடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்தது அமெரிக்கா**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக இந்தியாவும் ஸ்வீடனும் ஒருங்கிணைந்து செயல்படுத்திவரும் திட்டத்தில் அமெரிக்கா இணைந்தது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் 'தொழிற்துறை மாற்றத்துக்கான தலைமைத்துவ குழு' (லீட் இட்) என்ற திட்டத்தை இந்தியாவும் ஸ்வீடனும்

இணைந்து செயல்படுத்தி வருகின்றன. அண்மையில் அமெரிக்கா சார்பில் நடைபெற்ற பருவகாலமாற்ற மாநாட்டில், லீட் இட் திட்டத்தில் இணைவதற்கு அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் விருப்பம் தெரிவித்திருந்தார். இந்தத் திட்டத்தின் வாயிலாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவுடன் இணைந்து செயல்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

**5. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26% அதிகரிப்பு: மத்திய அரசு**

இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 2020–21 நிதியாண்டின் ஏப்ரல்–பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 26.51% அதிகரித்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது: கரோனா பேரிடர் தொடர்பான பல்வேறு சவால்களுக்கிடையிலும் 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலகட்டத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26.51% அதிகரித்து ₹43,798 கோடியை எட்டியுள்ளது.

குறிப்பாக, பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள், பழச்சாறுகள், நிலக்கடலை, ஆல்கஹால் பானங்கள், பிண்ணாக்கு, அரவைப் பொருள்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதி சிறப்பான அளவில் மேம்பட்டது. பதப்படுத்தப்பட்ட காய்கறி மற்றும் ஆல்கஹால் பானங்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி ஏப்ரல்–பிப்ரவரி காலகட்டத்தில் 40 சதவீதத்துக்கும் மேல் வளர்ச்சி கண்டுள்ளது என அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6. ஆக்சிஜன் தேவைக்கு 104–ஐ தொடர்பு கொள்ளலாம் – தமிழ்நாடு அரசு அறிவிப்பு!**

தமிழ்நாட்டு மருத்துவமனைகள் ஆக்சிஜன் தேவைக்கு 104 என்ற அவசர எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மருத்துவ ஆக்சிஜன் வழங்கல் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க, மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரின்கீழ் 24 மணி நேரமும் இயங்கும் அழைப்பு மையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

**7. புதிதாக 551 ஆக்ஸிஜன் உற்பத்தி மையம் அமைக்க பிரதமர் உத்தரவு**

நாடு முழுவதும் புதிதாக 551 ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களை அமைக்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார். நாட்டில் கரோனா இரண்டாமலை வேகமாக பரவிவரும் நிலையில், ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில், PM கேர்ஸ் நிதியிலிருந்து நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் மொத்தம் 551 ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் அமைக்க மோடி உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆக்ஸிஜன் அந்த மாவட்டத்தில் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

**8.'அஸ்ட்ரோசாட்' செயற்கைக்கோள் தரவுகளைப்பெற விண்ணப்பிக்கலாம்**

நாடு முழுவதும் உள்ள வானியலாளர்கள், ஆர்வலர்கள் 'அஸ்ட்ரோசாட்' செயற்கைக்கோளின் தரவுகளைப் பெற மே.31'க்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்வாகும் நபர்களுக்கு தகவல்களுடன் உரிய நிதியுதவியும் வழங்கப்படும் என்றும் ISRO அறிவித்துள்ளது. ISRO சார்பில் வானியல் ஆய்வுக்காக PSLV ஏவுகலம்மூலம் அஸ்ட்ரோசாட் செயற்கைக்கோள் ஆந்திர பிரதேச மாநிலத்துக்குட்பட்ட ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 2015ஆம் ஆண்டு செப்.28'இல் விண்ணில் செலுத்தப்பட்டது. விண்வெளியில் உள்ள புற ஊதாக் கதிர்கள், அங்கு பரவும் X கதிர்கள் இயக்கம், நட்சத்திரங்களின் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வுசெய்ய அஸ்ட்ரோசாட் பயன்படுத்தப்படுகிறது. 2018ஆம் ஆண்டு முதல் அஸ்ட்ரோசாட் அனுப்பிய படங்கள், தரவுகள் உள்ளிட்ட விவரங்களை பொதுவெளியில் ISRO வெளியிட்டு வருகிறது.

இவை பல்வேறு முக்கிய அறிவியல் ஆய்வுகளுக்குப் பயனுள்ளதாக அமைந்தது. அஸ்ட்ரோசாட் அனுப்பிய படங்கள் மூலம், பூமியில் இருந்து 9.3 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் நட்சத்திரக் கூட்டங்கள் இருப்பது கடந்த ஆண்டு கண்டறியப்பட்டது. இந்த நிலையில் அஸ்ட்ரோசாட்டின் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்வதற்கு ISRO மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக ISRO வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'நாடு முழுவதும் உள்ள வானியல் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அஸ்ட்ரோசாட் செயற்கைக்கோளின் தரவுகளைக்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் தங்கள் திட்ட ஆய்வறிக்கை விவரங்களை மே 31'க்குள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இதில் தேர்வாகும் நபர்களுக்கு தகவல்களுடன் உரிய நிதியுதவியும் வழங்கப்படும்.

**9. கோத்தகிரியிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்த சிறுவன் குரல்**

கோத்தகிரியிலுள்ள குழந்தை உரிமை ஆர்வலர் பி ராகுல், ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளின் உரிமைகள் மாநாட்டின் முதல் இணையவழி கருத்தரங்கில் பங்கேற்று பெருமை சேர்த்துள்ளார். கோத்தகிரி அருகேயுள்ள காக்காசோலை கிராமத்தில் வசித்து வருபவர் ராகுல் (13).

இவர் கோத்தகிரி அருகேயுள்ள கேர்கொம்பை அரசு உயர்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். தனது ஏழாவது வயதிலிருந்தே சுற்றுச்சூழல், குழந்தைகளின் உரிமை உள்ளிட்டவற்றின்மீது அதிக அக்கறை கொண்டவராவார். இதன் காரணமாக கேர் அறக்கட்டளையின் சார்பில் காக்காசோலை கிராமத்தில் நடத்தப்படும் குழந்தைகள் செயல்பாட்டு மையத்தில் இணைந்து வாழ்வியல் கல்வி, குழந்தைகளின் உரிமை கல்வி மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகிய பிரிவுகளில் இவருக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதில் சிறப்பாகப் பங்கேற்ற ராகுல் கேர் அறக்கட்டளையுடன் இணைந்து மரக்கன்றுகள் நடுவது, விதைப்பந்துகள் தயாரிப்பது, நெகிழி பைகளுக்கு எதிரான பிரசாரம் உள்ளிட்டவற்றில் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அண்மையில் நடத்தப்பட்ட இணையவழி கருத்தரங்கில் இந்தியாவின் சார்பில் இவர் பங்கேற்றுள்ளார். தன்னை 'வனங்களின் சகோதரர்' என அழைத்துக்கொள்ளும் இவர், சுற்றுச்சூழல் மற்றும் குழந்தை உரிமைகள் என்ற தலைப்பில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே சிறுவன் ஆவார்.

இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் சுற்றுச்சூழல் உரிமைகள் குறித்த குழந்தைகளின் கோரிக்கைகளை அவர் முன்வைத்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் ஐநா சபையின் குழந்தைகள் நல உரிமைக்குரல் உறுப்பினர்கள், குழுவின் முந்தைய தலைவர்கள், சர்வதேச குழந்தைகள் உரிமை நல அமைப்புகள் பங்கேற்று, பருவநிலை மாற்றம் குழந்தைகளின் வாழ்க்கையை எவ்வாறு கடுமையாக பாதிக்கிறது என்பது குறித்தும் விவாதித்துள்ளனர். இக்கருத்தரங்கில் அரசுகளும், சமூகங்களும் தூய்மையான சூழலுக்கான உரிமையை வழங்கவும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பாகவும் மாற்ற வேண்டிய நேரம் இதுவென ராகுல் வலியுறுத்தியுள்ளார்.

**10. பத்திரிகையாளர்கள் இழந்த சுதந்திரம்!**

சமூக நிகழ்வுகளை மக்களிடம் எடுத்துச் செல்வதில் பத்திரிகையாளர்களுக்கு முக்கிய பங்குண்டு. உண்மை நிகழ்ச்சிகளை மக்களுக்குக்கொண்டு செல்லவேண்டும் என்ற நோக்கில் பத்திரிகைகள் செயல்பட்டு வருகின்றன. பத்திரிகைகள், பத்திரிகையாளர்களின் செயல்பாட்டுக்கு சுதந்திரம் மிகவும் முக்கியமானது. எந்தவிதத் தலையீடும் இல்லாமல் அவர்கள் செயல்பட்டால்தான் உண்மையான தகவல்களை மக்கள் அறிந்துகொள்ள முடியும். பத்திரிகையாளர்களின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு இந்திய அரசமைப்புச் சட்டமே வழிகோலுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 19 (1) (ஏ) பிரிவானது, சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமையை வழங்குகிறது. அதுவே, பத்திரிகையாளர்களின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு அடிப்படையாக உள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்கள் மீதுமான வன்முறை அதிகரித்துள்ளது. அவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதை பயங்கரவாத அமைப்புகள், தீவிரவாத அமைப்புகள் உள்ளிட்டவை தடுக்க முயற்சிக்கின்றன. சில நாட்டு அரசுகளே பத்திரிகை சுதந்திரத்தைக் கேள்விக்குறியாக்கி வருகின்றன. சில நாடுகளில் பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் நிகழ்கிறது.

இந்தியாவின் கௌரி லங்கேஷ், சவூதி அரேபியாவின் ஜமால் கஷோகி என அந்தப் பட்டியல் தொடர்ந்து நீண்டு கொண்டே இருக்கிறது. உலக அளவில் கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டுமே சுமார் 50 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக 'எல்லைகளற்ற நிருபர்கள்' அமைப்பு தெரிவிக்கிறது.

நடப்பு ஆண்டுக்கான பத்திரிகை சுதந்திரக் குறியீட்டை 'எல்லைகளற்ற நிருபர்கள்' அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் மொத்தமுள்ள 180 நாடுகளில் நார்வே முதலிடத்தில் உள்ளது. முதல் 4 இடங்களை ஸ்கான்டிநேவியா என்று அறியப்படும் நாடுகள் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா 142ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டும் இந்தியா இதே இடத்தில்தான் இருந்தது. கடந்த 2016ஆம் ஆண்டில் 133ஆவது இடத்தில்

இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்து நிறைந்த நாடுகளில் ஒன்றாக இந்தியாவை அந்த அமைப்பு பட்டியலிட்டுள்ளது.

காவல்துறையினர், அரசியல் செல்வாக்கு கொண்டோர், சில அமைப்புக–ளைச் சேர்ந்தோர் உள்ளிட்டோரிடமிருந்து பத்திரிகையாளர்கள் திட்டமிட்–ட தாக்குதலை அதிகம் எதிர்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஜனநாயகம் தழைப்பதற்கும் நாட்டின் சுதந்திரம் நிலைப்ப–தற்கும் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் எந்தவிதத் தலையீடுமி–ன்றி சுதந்திரமாகச் செயல்படுவது அவசியம் என்பதை அறிஞர்களும் நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**பத்திரிகை சுதந்திரம் – முதல் ஐந்து நாடுகள்**

1–நார்வே

2–பின்லாந்து

3–ஸ்வீடன்

4–டென்மார்க்

5–கோஸ்டா ரிகா

**பத்திரிகை சுதந்திரம் – கடைசி ஐந்து நாடுகள்**

176–ஜிபூட்டி

177–சீனா

178–துர்க்மெனிஸ்தான்

179–வட கொரியா

180–எரித்ரியா

**1.** **சமீபத்தில் 2021 ஏப்ரலில், S&P குளோபல் மதிப்பீடுகள் வெளியிட்ட அறிக்கையின்படி, நடப்பு 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி முன்கணிப்பு சதவீதம் என்ன?**

அ) 6 சதவீதம்

ஆ) 8 சதவீதம்

**இ) 11 சதவீதம் ☑**

ஈ) 14 சதவீதம்




✓ S & P குளோபல் மதிப்பீடுகள், ஆசிய-பசிபிக் நிதி நிறுவனங்கள் குறித்த தனது அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 11 சதவீதமாக வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளின்படி, 2020-21ஆம் நிதியாண்டில், இந்திய பொருளாதாரம் 8 சதவீத அளவுக்கு சுருங்கும்.

**2.** **'COVIRAP' தொழில்நுட்பத்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

அ) NIT திருச்சிராப்பள்ளி

ஆ) AIIMS

இ) MIT

**ஈ) IIT கரக்பூர் ☑**

✓ கரக்பூர் – இந்திய தொழில்நுட்ப நிறுவனம் தனது சுகாதார தயாரிப்பான 'COVIRAP'ஐ வணிகமயமாக்கியுள்ளது. இது, COVID நோய்த்தொற்றை கண்டறியும் தொழில்நுட்பமாகும். எளிய முறையில், மலிவு கட்டணத்தில் மேற்கொள்ளப்படும் இப்பரிசோதனையின் முடிவுகளை, 45 நிமிடத்தில் திறன்பேசியின் செயலியின் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம்.

**3.** **ஏப்ரல்.1 அன்று எந்த மாநிலத்தின் உதய நாள், 'உத்கல் திவாஸ்' எனக் கொண்டாடப்படுகிறது?**

அ) தெலங்கானா

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) ஒடிஸா ☑**

ஈ) கர்நாடகா




✓ இந்திய மாநிலமான ஒடிஸா, 1936 ஏப்ரல்.1 அன்று உருவாக்கப்பட்டது. அதன் மாநில நாள், 'உத்கல் திவாஸ்' என அழைக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. முந்தைய பீகார் மற்றும் ஒடிஸா மாகாணத்திலிருந்து ஒடிஸா ஒரு தனி மாநிலமாக உருவான நினைவாக, அந்த நாள் கொண்டாடப்படுகிறது.

**4.** **உலக ஹோமியோபதி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஏப்ரல் 10 ☑**

ஆ) ஏப்ரல் 11

இ) ஏப்ரல் 12

ஈ) ஏப்ரல் 13



✓ ஆண்டுதோறும் ஏப்.10 உலக ஹோமியோபதி நாள் கொண்டாடப்பாடுகி-றது. "Homeopathy- Roadmap for Integrative Medicine" என்பது நடப்பு ஆண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தை என்று அழைக்கப்படும் மருத்துவர் சாமுவேல் ஹேன்மேனின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

**5.** **தேசிய பாதுகாப்பான தாய்மைப்பருவ நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 10

**ஆ) ஏப்ரல் 11 ☑**

இ) ஏப்ரல் 12

ஈ) ஏப்ரல் 13



✓ கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு மகப்பேறு பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்பான தாய்மைப் பருவ நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ இந்தியாவின் பாதுகாப்பான தாய்மைப்பருவத்துக்கான வெண்ணாடா கூட்டணியின் (White Ribbon Alliance for Safe Motherhood, India) ஒரு முன்னெடுப்பாக இந்நாள் கொண்டாடப்பாடுகிறது. "Stay at Home during Coronavirus, keep Mother and Newborn Safe from Coronavirus" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**6.** **ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்த ஆண்டு எது?**

**அ) 1919 ☑**

ஆ) 1820

இ) 1819

ஈ) 1857



✓ ஜாலியன்வாலா பாக் படுகொலை (1919): பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக் -குமுறைக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நிராயுதபாணியான மக்கள் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக் என்ற இடத்தில் 1919 ஏப்ரல் 13 அன்று கூடியிருந்தனர். மக்கள் கிளர்ச்சியை அடக்குவதற்காக, ஜெனரல் டயர் தனது துருப்புக்களை முன்னறிவிப்பு ஏதுமின்றி அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டான்.

✓ அத்தோட்டத்தில் பிரிட்டிஷ்காரர்களால் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்த -னமான செயல், வரலாற்றில், ஜலியன்வாலா பாக் படுகொலை (அல்லது அமிர்தசரஸ் படுகொலை) என்று அறியப்பட்டது.

**7.** **தேசிய குடிமைப் பணிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 20

**ஆ) ஏப்ரல் 21 ☑**

இ) ஏப்ரல் 22

ஈ) ஏப்ரல் 23




✓ 1947 ஏப்.21 அன்று இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தர் வல்லபாய் படேல், தகுதிகாண் பருவத்திலிருந்த நிர்வாக சேவை அதிகாரிகளின் மத்தியில் உரையாற்றினார். தில்லியின் மெட்கால்ப் மாளிகையில் நடந்தேறிய அவ்வரலாற்றுச் சிறப்புமிக்க உரைநிகழ்த்தலி -ன்போது, அரசு ஊழியர்களை "இந்தியாவின் எஃகு சட்டகம்" என அவர் விவரித்தார். இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில், நாடு முழுவதும் ஏப்.21 அன்று குடிமைப்பணிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது.

**8.** **தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 23

**ஆ) ஏப்ரல் 24 ☑**

இ) ஏப்ரல் 25

ஈ) ஏப்ரல் 26




✓ ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.24 அன்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிறது. உள்ளாட்சிகளை சட்டரீதியாக வலுப்படுத்த 1993ஆம் ஆண்டு இதே நாளில், அரசியலமைப்பு (73ஆவது சட்டதிருத்தம்) சட்டம், 1992 அமலுக்கு கொண்டுவரப்பட்டது.


**9.** **உலக நூல் & பதிப்புரிமை நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 22

**ஆ) ஏப்ரல் 23 ☑**

இ) ஏப்ரல் 24

ஈ) ஏப்ரல் 25




✓ உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள் (World Book and Copyright Day) அல்லது உலக நூல் நாள் என்பது வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரி -மையூடாக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை வளர்க்கும் நோக்குடன் ஐநா கல்வி, அறிவியல் & பண்பாட்டு நிறுவனம் ஆண்டுதோறும் ஏப்.23 அன்று நடத்தும் ஒரு நிகழ்வாகும்.

✓ உலக இலக்கியத்துக்கான ஒரு குறியீடாகவே இந்நாள் தேர்வு செய்யப்ப -ட்டதாக UNESCO அறிவித்துள்ளது. 1616ஆம் ஆண்டு இந்நாளிலேயே மிகுவேல் டி செர்வண்டேஸ், வில்லியம் ஷேக்ஸ்பியர், இன்கா டி லா வேகா ஆகியோர் காலமானார்கள்.

- ✓ ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வசதிகளைக்கொண்ட, அனைத்து நூல்–களும் கிடைக்கும் வகையில் ஒரு நூல் தலைநகரத்தை உருவாக்கும் திட்டத்தை கடந்த 2001'இல் UNESCO தொடங்கியது. மேலும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நகரத்தை நூல்களின் தலைநகரமாகத் தேர்வு செய்யும். 2021ஆம் ஆண்டுக்கான நூல்களின் தலைநகரமாக ஜார்ஜியா நாட்டின் தலைநகரமான திபிலீசி நகரம் தெரிவாகியுள்ளது.

---

**10. உலக மலேரியா நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 24

**ஆ) ஏப்ரல் 25 ☑**

இ) ஏப்ரல் 26

ஈ) ஏப்ரல் 27




- ✓ ஆண்டுதோறும் ஏப்.25 அன்று உலக மலேரியா நாள் கடைப்பிடிக்கப்படு–கிறது. "Reaching the 0–malaria target" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக மலேரியா நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் படி, இந்தியா, உலகளாவிய மலேரியா பாதிப்புகளில் மூன்று சதவீத பாதிப்புக்கு காரணமாக அமைகிறது. மேலும், 2017ஆம் ஆண்டின் சூழ–லை ஒப்பிடும்போது, இந்தியா, 49% அளவுக்கு மலேரிய பாதிப்புகளை குறைத்ததோடு அதுசார்ந்த இறப்புகளையும் 50.5% அளவுக்கு குறைத்து–ள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கொடுமணல் அகழ்வாராய்ச்சியில் இரும்பு உருக்கும் கட்டமைப்பு கண்டுபிடிப்பு**

கொடுமணல் அகழ்வாராய்ச்சியில் மண் அடுப்புகளால் செய்யப்பட்ட இரும்பு உருக்கும் கட்டமைப்பு இருந்ததற்கான தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டம், கொடுமணல் நொய்யல் ஆற்றின் கரையோரம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் தமிழக தொல்லியல் துறை மூலம் பத்தாவது முறையாக அகழ்வாராய்ச்சி கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி தொடங்கியது. தொல்லியல் துறை அகழாய்வுத் திட்ட இயக்குநர் ஜெ ரஞ்சித் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இதுகுறித்து தொல்லியல் நிபுணர்கள் கூறியதாவது:** இப்பகுதியில் 2,400 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு குடியிருப்புக–ள், பயன்பாட்டுப் பொருள்கள், நாணயம், மண்பானை ஓடுகள், குறிப்புகள் போன்ற தரவுகள் கிடைத்து வருகின்றன. பல்வேறு பகுதிகளில் நடந்த அகழாய்வில் 1,999 தமிழ் பிராமி எழுத்து ஆவணங்கள் கிடைத்துள்ளன. அதில் 1,000க்கும் மேற்பட்டவை இங்கு கிடைத்தவை. இதன்மூலம் இப் பகுதியில் பொ ஆ மு 400'க்கு முன்பே பண்டமாற்றுகள், அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டது தெரியவருகிறது.

தற்போதைய அகழாய்வில் கருப்பு, செம்மண் அடர்ந்த இப்பகுதியில் இரும்பு–க்கான மூலப்பொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றை எடுத்து கரையோர–ம் 10'க்கும் மேற்பட்ட மண் அடுப்புகளில் 1,800° செல்சியசுக்கு மேல் சூடு–படுத்தி இரும்பை பிரித்து எடுத்துள்ளனர். இரும்பை உருக்கி, மண் பாத்திரத்தில் சேகரித்து, கத்தி, ஈட்டி உள்ளிட்ட ஆயுதங்கள், ஆணி, கம்பி போன்ற பயன்பாட்டுப் பொருள்கள் செய்ததற்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இங்கு தோண்டப்பட்ட 30 குழிகளில் 12'க்கும் மேற்பட்ட குழிகளில் அடுப்பு மூலம் ஆலை போன்று இரும்பு உருக்கியதற்கான அடையாளமும், பிரித்து எடுத்தபின் விட்டுச்செல்லப்பட்ட இரும்புக்கழிவுகளும் சேகரிக்கப்பட்டுள்ள–ன. ஆய்வுதொடரும்போது மேலும் பல தகவல்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் செம்பு நாணயங்கள், தமிழ் பிராமி எழுத்துகள், பானை ஓடுகள், கல்லறைகள், இரும்பு மூலப்பொருள், கழிவுகள் கிடைத்துள்ளன.

இங்கு வசித்த மக்கள் ஆரம்பத்தில் ஆற்றங்கரையை ஒட்டியும், அதன்பின் பேரழிவுக்குப்பின் உயரமான பகுதிகளிலும் வசித்துள்ளனர். அவா்கள் குடியிருப்புக்கு கிழக்கே கல்லறைகள் அமைத்துள்ளனர். இங்குள்ள கல்லறைகள் பலகை கற்களால் அறை ஏற்படுத்தப்பட்டு, அதில் பெரிய மண் பானைக்குள் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் நேரடியாக பானைக்குள் எலும்புகள் கிடைத்துள்ளன.

புதைக்கப்பட்டவாறு எலும்பு அமைப்புகள் கிடைக்கவில்லை. இருப்பினும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துக்கு இவற்றை அனுப்பி எந்த காலத்தைச் சேர்ந்த எலும்புகள் எனக் கேட்டுள்ளோம். இந்த அகழாய்வு வரும் ஜூலை வரை தொடர வாய்ப்புள்ளது என்றனர்.

---

**2. மணலூரில் இன்று அகழாய்வு தொடக்கம்**

கீழடியில் நடந்துவரும் ஏழாம்கட்ட அகழாய்வின் ஒருபகுதியாக மணலூரில் அகழாய்வுப்பணிகள் தொடங்குகின்றன. சிவங்கை மாவட்டம் திருபுவனம் அருகேயுள்ள கீழடியில் கடந்த பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி ஏழாம்கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கின. கீழடி, அகரம், கொந்தகை ஆகிய மூன்று இடங்களில் அகழாய்வு நடந்துவருகிறது. ஆறாம்கட்ட அகழாய்வுப்பணிகள் கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய நான்கு இடங்களிலும் நடந்தன.

ஏழாம்கட்ட அகழாய்வும் மேற்கண்ட நான்கு இடங்களிலும் நடைபெறும் என தொல்லியல்துறை சார்பில் அறிவிக்கப்பட்டது. பணிகள் தொடங்கி இரு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மணலூரில் மட்டும் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தது.

மணலூரில் இடம் தேர்வுசெய்வதில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக பணிக–ள் தொடங்கப்படவில்லை. ஆறாம்கட்ட அகழாய்வில் மணலூரில் ஏழு குழிகள் தோண்டப்பட்டு 39 பொருள்கள் மட்டுமே கண்டறியப்பட்டதால் 7 ஆம் கட்ட அகழாய்வில் சரியான இடத்தை தேர்வு செய்வதில் அதிகாரிகள் கவனமாக இருந்தனர். தற்போது மணலூரைச் சேர்ந்த ஜானகி அம்மாள் என்பவரின் 1 ஏக்கர் நிலத்தை அகழாய்வுக்காக தொல்லியல்துறையினர் தேர்வு செய்துள்ளனர்.

மணலூர், அகரம், கழுகேர்கடை உள்ளிட்ட கிராமங்களில் முளைப்பாரி உற்சவம் உள்ளிட்டவைகள் நடைபெறும் போது நிறைவாக மணலூர் முனியாண்டி கோயிலில் முடிவடையும். தற்போது வரை இந்த நிகழ்வு தொடர்வதால் பண்டையகாலத்திற்கும் இம்முளைப்பாரி உற்சவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் எனக்கருதி மணலூரில் அந்த இடத்தில் அகழாய்வுப் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் மழைக்காலம் தொடங்கிவிடும் என்பதால் அதற்குள் விரைவாக அகழாய்வுப் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கீழடியில் இதுவரை 3 குழிகள் மட்டும் தோண்டப்பட்டு சுடுமண்ணால் செய்யப்பட்ட தாயகட்டை, கல் உழவு கருவி, பானை ஓடுகள் உள்ளிட்டவைகள் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது மேலும் இரு குழிகள் தோண்டும் பணி தொடங்கியுள்ளது. கொந்தகை, அகரம் ஆகிய இடங்களில் தலா மூன்று குழிகள் தோண்டப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

---

**3. தமிழில் புதிய கல்விக் கொள்கை வெளியானது**

புதிய கல்விக் கொள்கையின் உள்ளூர் மொழிபெயாப்பு 17 மொழிகளில் வெளியாகி, தமிழில் மட்டும் வெளியிடப்படவில்லை. இதற்கு பல்வேறு தரப்பிலும் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் தமிழ்மொழிபெயர்ப்பை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மத்திய அரசின் சார்பில் 2019ஆம் ஆண்டு கஸ்தூரி இரங்கன் கல்விக்குழு தாக்கல்செய்த கல்விக்கொள்கை–யை அடிப்படையாகக்கொண்டு 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை, கடந்த ஆண்டு ஜூலை 29'இல் ஒப்புதல் அளித்தது.

10+2 என்ற பள்ளிப்பாடமுறை மாற்றப்பட்டு, 5+3+3+4 என்ற அடிப்படையில் 3 முதல் 8 வயது, 8 முதல் 11 வயது, 11 முதல் 14 வயது, 14–18 வயது ஆகிய மாணவர்களுக்காகப் பாடமுறை மாற்றப்படும், மாணவர்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரையில், தாய்மொழி, உள்ளூர் மொழி, பிராந்திய மொழி, பயிற்றுமொழியாக இருக்கவேண்டும், பல்கலைகள், உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு பொதுவான நுழைவுத் தேர்வு நடத்தப்படும், மாணவர்களின் பள்ளிப்பாட அளவு குறைக்கப்படும். ஆறாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தப்ப–டுவார்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் கூறப்பட்டன.

ஆரம்பத்தில் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் மட்டுமே தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட்டது. பிராந்திய மொழிகளில் மொழிபெயர்ப்–புகள் வெளியிடப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்த நிலையில், 17 பிராந்திய மொழிகளில் கல்விக் கொள்கையின் மொழிபெயர்ப்பு கடந்த ஏப். 24 வெளியாகி இருந்தது. கன்னடம், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட 17 மொழிகளில் தேசிய கல்விக்கொள்கை மொழிபெயர்க்கப்பட்டு வெளியான நிலையில், தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை.

இந்த நிலையில் தேசிய கல்விக் கொள்கையின் தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. மொத்தம் 155 பக்கங்களுடன் கூடிய மொழிபெயர்ப்பை இணையதள முகவரியில் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

**4. ஆஸ்கர் விருதுகள் 2021: சிறந்த திரைப்படமாக 'நோமேட்லேண்ட்' தேர்வு**

93ஆவது ஆஸ்கர் விருது வழங்கும் விழா லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா –வில் இருக்கும் ஹாலிவுட்டின் டால்பி தியேட்டரில் மட்டுமல்லாமல் லாஸ் ஏஞ்சல்ஸின் யூனியன் ஸ்டேஷன் அரங்கிலும் இம்முறை நடைபெற்றது. இதில் குளோயி ஸாவோ இயக்கிய 'நோமேட்லேண்ட்' சிறந்த திரைப்பட –மாகவும், ஸாவோ சிறந்த இயக்குநராகவும் வெற்றிபெற்றனர்.

சிறந்த இயக்குநர் என்கிற ஆஸ்கரை வெல்லும் இரண்டாவது பெண் ஸாவோ என்பது குறிப்பிடத்தக்கது.

**விருது வென்றவர்கள் பட்டியல்**

**சிறந்த இயக்குநர்** – குளோயீ ஸாவோ

**சிறந்த திரைப்படம்** – நோமேட்லேண்ட்

**சிறந்த நடிகை** – பிரான்சிஸ் மெக்டார்மண்ட் (நோமேட்லேண்ட்)

**சிறந்த நடிகர்** – ஆந்தனி ஹாப்கின்ஸ் (தி பாதர்)

**சிறந்த உறுதுணை நடிகர்** – டேனியல் கலூயா (Judas and the Black Messiah)

**சிறந்த உறுதுணை நடிகை** – யூ ஜங் யூன் (மினாரி)

**சிறந்த சர்வதேசத் திரைப்படம்** – அனதர் ரவுண்ட் (டென்மார்க்)

**சிறந்த தழுவல் திரைக்கதை** – தி பாதர்

**சிறந்த திரைக்கதை** – பிராமிஸிங் யங் வுமன்

**சிறந்த அனிமேஷன் திரைப்படம்** – ஸோல்

**சிறந்த பாடல்** – பைட் பார் யூ (Judas and the Black Messiah)

**சிறந்த இசை** – ஸோல்

**சிறந்த படத்தொகுப்பு** – சவுண்ட் ஆஃப் மெடல்

**சிறந்த ஒளிப்பதிவு** – மேங்க்

**சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு** – மேங்க்

**சிறந்த வரைகலை** – டெனட்

**சிறந்த ஆவணப்படம்** – மை ஆக்டோபஸ் டீச்சர்

**சிறந்த ஆவணக் குறும்படம்** – கோலெட்

**சிறந்த அனிமேஷன் குறும்படம்** – இஃப் எனிதிங் ஹேப்பன்ஸ் ஐ லவ் யூ


**சிறந்த குறும்படம்** – டூ டிஸ்டண்ட் ஸ்ட்ரேஞ்சர்ஸ்

**சிறந்த ஒலி** – சவுண்ட் ஆஃப் மெடல்

**சிறந்த ஒப்பனை, சிகை அலங்காரம்** – மா ரெய்னீஸ் ப்ளாக் பாட்டம்

**சிறந்த ஆடை வடிவமைப்பு** – மா ரெய்னீஸ் ப்ளாக் பாட்டம்

**1.உலக அறிவுசார் சொத்து நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) ஏப்ரல் 25

**ஆ) ஏப்ரல் 26 ☑**

இ) ஏப்ரல் 27


ஈ) ஏப்ரல் 28

✓ உலக அறிவுசார் சொத்து நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.26 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ உலக அறிவுசார் சொத்து அமைப்பானது (WIPO) கடந்த 2000ஆம் ஆண்டில் "காப்புரிமைகள், பதிப்புரிமை, வணிக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், "படைப்பாற்றலையும் உலகெங்குமுள்ள சமூகங்களின் வளர்ச்சிக்கு படைப்பாளிகள் மற்றும் புத்தகாக்குநர்கள் அளித்த பங்களிப்புகளை கொண்டாடுவதற்காகவுமாக" இந்நாளை உருவாக்கியது. நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் – "IP and SMEs: Taking your ideas to market".

---

**2.அண்மைய NASA திட்டம் குறித்து, 'MOXIE'இல் உள்ள 'M' எதைக் குறிக்கின்றது?**



அ) Maintained

ஆ) Minimum

இ) Maximum

**ஈ) Mars ☑**

✓ NASA'இன் பெர்ஸிவெரன்ஸ் ஊர்தி அதன் MOXIE (Mars Oxygen In-Situ Resource Utilization Experiment) சாதானத்தைப் பயன்படுத்தி செவ்வாய் கிரகத்தில் ஆக்ஸிஜனை பிரித்தெடுத்துள்ளது. செவ்வாய் கோளின் வளிமண்டலத்திலிருந்த கரியமிலவாயுவிலிருந்து ஐந்து கிராம் ஆக்ஸிஜனை MOXIE உற்பத்தி செய்துள்ளது. 5 கிராம் என்பது மனிதன் சராசரியாக 10 நிமிடங்களில் சுவாசிக்கும் ஆக்ஸிஜன் அளவு.

✓ செவ்வாயின் வளிமண்டலம் 96 சதவீதம் கரியமிலவாயுவாலேயே நிறைந்துள்ளது. ஆக்சிஜன் 0.13% மட்டுமே உள்ளது. கரியமிலவாயுவை உட்கவர்ந்து அதிலிருந்து உயிர்வளியை உருவாக்குவதே MOXIE'இன் வேலையாகும்.

---

**3. IEA அறிக்கையின்படி, நடப்பு 2021ஆம் ஆண்டில், இந்தியாவில், $CO_2$ உமிழ்வின் சதவீதம், கடந்த 2020ஆம் ஆண்டை ஒப்பிடும்போது எத்தனை சதவீதம் அதிகமாக இருக்கும்?**

**அ) 1.4% ☑**

ஆ) 5.4%

இ) 10.4%

ஈ) 20%

1.4%

✓ பன்னாட்டு எரிசக்தி முகமை (IEA) தனது சமீபத்திய அறிக்கையில், நடப்பு 2021ஆம் ஆண்டில், இந்தியாவில், கரியமில வாயு ($CO_2$) உமிழ்வு 1.4% அதிகமாக இருக்கும் என்று கூறியுள்ளது. அது, 2020ஆம் ஆண்டில் உமிழப்பட்ட 30 மில்லியன் டன் கரியமில வாயுவை விட 1.4% அதிகமாகும். மேலும், நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்ற மூலங்களிலிருந்து கிடைக்கும் உற்பத்தியை விட 3 மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் அவ்வறிக்கை கூறியுள்ளது.

---

**4. COVID-19'இன் தாக்கத்திற்கு எதிரான இளையோரின் யோசனைகளுக்கு நிதியளிப்பதை நோக்கமாகக்கொண்ட, WHO'ஆல் ஆதரிக்கப்படும் திட்டத்தின் பெயர் என்ன?**

**அ) Global Youth Mobilization ☑**

ஆ) World COVID Response Program

இ) World Health Programme

ஈ) Global Economy Recover Programme

GLOBAL YOUTH MOBILIZATION

✓ "Global Youth Mobilization" என்பது COVID-19 தொற்றுநோயின் தாக்கத்திற்கு எதிரான இளையோர்களின் யோசனைகளுக்கு நிதியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐநா அறக்கட்டளை ஆகியவை துணைபுரிகின்றன.

✓ இதற்கு UNICEF, USAID, UNFPA, ஐரோப்பிய ஆணையம், சேல்ஸ் போர்ஸ், FIFA மற்றும் உலக நாடுகளின் தலைவர்களும் அரசாங்கங்களும் ஆதரிக்கின்றன.

---

**5. ஆக்ஸிஜன் தணிக்கைக் குழுவை உருவாக்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) கேரளா

ஆ) மகாராஷ்டிரா

இ) கோவா

**ஈ) தில்லி ☑**

$O_2$

✓ தில்லி முழுவதுமுள்ள மருத்துவமனைகளில் மருத்துவ ஆக்ஸிஜனின் கடுமையான பற்றாக்குறையை அடுத்து, தில்லி அரசு 24 பேர்கொண்ட ஆக்ஸிஜன் தணிக்கைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழு, ஆக்ஸிஜன் இருப்பு மற்றும் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணிக்கும். ஆக்ஸிஜன் அனைவருக்கும் உகந்த முறையில் கிடைப்பதையும் இந்தக் குழு உறுதிசெய்யும்.

---

**6. SHIELDS என்ற பெயரில் திட்டமொன்றை தொடங்கியுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

**அ) NASA ☑**



ஆ) ISRO

இ) ESA

ஈ) ROSCOSMOS

✓ அமெரிக்க விண்வெளி முகமையான NASA, அண்மையில் SHIELDS (Spatial Heterodyne Interferometric Emission Line Dynamics Spectrometer) என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. சூரிய மண்டலத்திற்குள் நகர்ந்து வந்த விண்மீனிடை துகள்களின் ஒளியை ஆராய்வதே இதன் நோக்கமாகும். மெக்ஸிகோவிலிருந்து NASA பிளாக் பிராண்ட் IX ஆய்வு ஏவுகலத்தைப் பயன்படுத்தி இத்திட்டம் ஏவப்பட்டது.

---

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "CODEX ALIMENTARIUS" என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) இராணுவ கொள்முதல்

ஆ) பருவநிலை மாற்றம்

**இ) உணவு தரநிலைகள் ☑**

ஈ) செயற்கை நுண்ணறிவு



✓ "CODEX ALIMENTARIUS" பன்னாட்டு உணவுத் தரநிலைகளும் வழிகாட்டுதல்களும் சர்வதேச உணவு வர்த்தகத்தின் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு பங்களிக்கின்றன. 1963'இல் நிறுவப்பட்ட இத்தரநிலைகளை, இடர் மதிப்பீட்டு அமைப்புகள் அல்லது FAO மற்றும் WHOஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனங்கள் வழங்கின.

✓ அண்மையில், "CODEX ALIMENTARIUS" ஆணையத்தின்கீழ் நிறுவப்பட்ட மசாலா மற்றும் சமையல் மூலிகைகள்பற்றிய CODEX குழுவின் ஐந்தாவது அமர்வு மெய்நிகராக நடத்தப்பட்டது. ஏப்.20 முதல் ஏப்ரல்.29 வரை இது நடைபெறுகிறது.

---

**8. டிராக்கோமாவை ஒழித்ததற்காக உலக நல்வாழ்வு அமைப்பிடம் இருந்து சான்றுபெற்ற நாடு எது?**

**அ) காம்பியா ☑**



ஆ) ஜிம்பாப்வே

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) சாட்

✓ பொதுநலச்சிக்கலான கண்ணிமை நோயை ஒழித்ததற்காக உலக நல வாழ்வு அமைப்பிடம் இருந்து அண்மையில் காம்பியா சான்றிதழ் பெற்றது. இதன்மூலம், இந்த மைல்கல்லை எட்டிய உலக நல வாழ்வு அமைப்பின் ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள 2ஆவது நாடாக காம்பியா ஆனது.

- ✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்காக 2021 முதல் 2030 வரையிலான செயல்திட்டத்தை WHO அறிமுகப்படுத்தியது. கோட் டி ஐவோயர் நாடு இந்தச் சாதனையை அடைந்த முதல் நாடாகும்.

---

**9. KRI நங்கலா–402 என்னும் எந்த நாட்டின் நீர்மூழ்கிக்கப்பலைத் தேடும்பணியில் இந்திய கடற்படை இணைந்துள்ளது?**



அ) நேபாளம்

ஆ) இலங்கை

**இ) இந்தோனேசியா ☑**

ஈ) ஜப்பான்

- ✓ இந்தோனேசிய நீர்மூழ்கிக்கப்பலான KRI நங்கலா–402 அதன் 53 பேர் கொண்ட குழுவினருடன் அண்மையில் திடீரென காணாமல் போனது, அதனை தேடி மீட்கும் நடவடிக்கையில் இந்திய கடற்படை அண்மையில் இணைந்துள்ளது. பாலி தீவுக்கு வடக்கே இந்நீர்மூழ்கி காணாமல்போன பிறகு, இந்தோனேசியா இந்தியாவின் உதவியைக் கோரியது.
- ✓ மீட்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக இந்திய கடற்படையின் ஆழ்கடல் நீர்மூழ்கு மீட்புக்கப்பல் விசாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டது.

---

**10. இந்திய பெண்கள் ஏழு தங்கங்களை வென்ற உலக இளைஞர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட்ட நாடு எது?**



அ) ரஷியா

**ஆ) போலந்து ☑**

இ) உக்ரைன்

ஈ) பிரான்ஸ்

- ✓ போலந்தின் கீல்ஸில் நடைபெற்ற உலக இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில், இந்திய குத்துச்சண்டை வீராங்கனைகள் 7 தங்கப் பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனையை உருவாக்கினர்.
- ✓ இறுதிப்போட்டியாளர்களான கிதிகா, நெளரம் பாபிரோஜிசனா சானு, பூனம், விங்கா, அருந்ததி சௌத்ரி, டி சனாமாச்சா சானு மற்றும் அல்பியா பதான் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர். மேலும் மூன்று இந்திய குத்துச்சண்டை வீரர்களும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொலைத்தொடர்பு சேவை வழங்குவது தொடர்பாக BSNL–இந்தியன் வங்கி புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தொலைத்தொடர்பு சேவை வழங்குவது தொடர்பாக பாரத் சஞ்சார் நிகம் நிறுவனம் (BSNL) மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியன் வங்கிக்கு குறைந்த விலையில் தொலைத்தொடர்பு இணையதள சேவையை வழங்குவதற்காக, அந்த வங்கியுடன் BSNL நிறுவனம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

---

**2. இந்தியப்பெண் அறிவியலாளருக்கு சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு விருது**

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்ட இந்தியப் பெண் விஞ்ஞானி கிரிதி கரந்த், சர்வதேச அமைப்பால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்ப–தற்காக சர்வதேச விஞ்ஞானிகளுடன் இணைந்து 'வைல்ட் எலமண்ட்ஸ்' அறக்கட்டளை அமைப்பு செயல்பட்டு வருகிறது. மனித உலகம், தாவர உலகம், விலங்குலகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பாதுகாப்பதற்கு இந்த அமைப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அந்த அமைப்பு கிரிதி கரந்துக்கு 'வன புத்தாக்க அறிவியலாளர்' விருதை வழங்கியுள்ளது. இந்த விருதைப் பெறும் முதல் இந்தியப் பெண் கிரிதி கரந்த் என்பது குறிப்பிடத்தக்கது. பெங்களூரைச் சேர்ந்த உயிரியல் அறிவியலாளரான கிரிதி கரந்த், வனப் பாதுகாப்பு ஆய்வு மையத்தின் தலைமை அறிவியலாளராகவும் உள்ளார். அமெரிக்கா, பிரிட்டன், கென்யா, கொலம்பியா, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் சிலருக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதைப் பெறுவோருக்கு ஆராய்ச்சிப்பணிகளுக்காக ஈராண்டுகட்கு ₹75 இலட்சத்தை அந்த அமைப்பு வழங்கவுள்ளது. வனப்பாதுகாப்பு தொடர்–பான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு இந்த விருது உதவும் என்று கிரிதி கரந்த் தெரிவித்துள்ளார்.

---

**3. அமெரிக்க நீதி துறையில் இந்திய பெண்மணி!**

இந்தியாவை பூர்வீகமாக கொண்ட வனிதா குப்தாவை அமெரிக்காவின் இணை அட்டர்னி ஜெனரலாக நியமிக்க, பார்லிமென்டின் செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. வனிதா குப்தா, சமூக உரிமைகள் தொடர்பான விஷயத்தில், அமெரிக்காவில் தலைச்சிறந்த வழக்கறிஞராக இருந்து வருகிறார். ஒபாமா அதிபராக இருந்தபோது, உதவி அட்டர்னி ஜெனரலாக பணியாற்றியும் உள்ளார். தற்போது, ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் அதிபராக பதவியேற்ற பின், நீதித் துறையில் மூன்றாவது உயரிய பதவியான, இணை அட்டர்னி ஜெனரலாக, வனிதா குப்தா பதவி ஏற்கிறார்.

அவரது நியமனத்தை உறுதிசெய்வதற்காக, பார்லிமென்டின் செனட் சபை–யில் ஓட்டெடுப்பு நடந்தது. மொத்தம், 100 உறுப்பினர்கள் உள்ள செனட் சபையில், ஜனநாயகக்கட்சி மற்றும் குடியரசு கட்சிக்கு தலா, 50 உறுப்பினர்–கள் உள்ளனர். குடியரசு கட்சியின் லிசா முர்கோவ்ஸி ஆதரித்து ஓட்டளித்–ததால், 51 – 49 என்ற ஓட்டு விகிதத்தில், வனிதா குப்தா நியமனத்துக்கு, செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**1.** **இந்தியா, கீழ்காணும் எந்த நாட்டுடன் இணைந்து 'காலநிலை & தூய ஆற்றல் நிகழ்ச்சிநிரல் 2030 கூட்டணி'யை தொடங்கியுள்ளது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) ஜெர்மனி

இ) பிரான்ஸ்

**ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிபர் ஜோ பைடன் கூட்டிய காலநிலை மாற்றம் குறித்த மெய்நிகரான உச்சிமாநாட்டின்போது, இந்தியாவும் ஐக்கிய அமெரிக்க நாடுகளும் இணைந்து பசுமை ஒத்துழைப்பு குறித்த "நிகழ்ச்சி நிரல் 2030" கூட்டணியைத் தொடங்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

✓ "இந்தியா–அமெரிக்கா காலநிலை மற்றும் தூய ஆற்றல் நிகழ்ச்சி நிரல் 2030 கூட்டாண்மை", காலநிலை மாற்றத்தை எதிர்த்து விரைவாகவும், உலக அளவில் பெருமளவிலும் நடவடிக்கைகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உச்சிமாநாட்டில், சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் போன்ற பல்வேறு நாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

---

**2.** **வேதி ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) வெங்கையா

**ஆ) G C முர்மு ☑**

இ) இராஜேஷ் குமார்

ஈ) S A பாப்டே

✓ வேதி ஆயுதங்களை தடைசெய்வதற்கான அமைப்பின் வெளியக தணிக்–கையாளராக தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி G C முர்மு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். அவர் மூன்றாண்டு காலத்திற்கு இப்பதவியில் பணியாற்றுவார். வெளியக தணிக்கையாளராக அவரது பதவிக்காலம் நடப்பு 2021ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது.

✓ வேதி ஆயுதங்களின் தடைக்கான அமைப்பு என்பது நெதர்லாந்தின் தி ஹேக் நகரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆகும்.

---

**3.** **பின்வரும் எந்தத் திட்டத்தின்கீழ், மே மற்றும் ஜூன் மாதங்களில் ஏழைகளுக்கு, இந்திய அரசாங்கம், இலவச உணவு தானியங்களை வழங்கவுள்ளது?**



அ) பிரதமர் ஜன் தன் யோஜனா

**ஆ) பிரதமர் கரிப் கல்யாண் அன்ன யோஜனா ☑**

இ) பிரதமர் முத்ரா யோஜனா

ஈ) பிரதமர் ஆத்மா நிர்பார் கல்யாண் யோஜனா

✓ மே மற்றும் ஜூன் மாதங்களில் ஏழை எளியோருக்கு இலவச உணவு தானியங்களை வழங்குவதை மீண்டும் தொடங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. PDS பயனாளிகளுக்கு ஐந்து கிலோ கூடுதல் உணவு தானியங்கள், PMGKAY'இன்கீழ் மே & ஜூன் ஆகிய இரு மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஆனால், இம்முறை, பருப்புவகைகள் ஏழைகளுக்–கு வழங்கப்படமாட்டாது. ஏழை எளிய மக்கள், தொற்றுநோய் காலத்தை கையாளுவதற்காக, PMGKAY திட்டம் அறிவிக்கப்பட்டது.

---

**4.** **ITUஆல் நடப்பாண்டுக்கான (2021) "பன்னாட்டு தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்கள்" நாள் அனுசரிக்கப்–பட்ட தேதி எது?**




அ) ஏப்ரல் 21

**ஆ) ஏப்ரல் 22 ☑**

இ) ஏப்ரல் 23

ஈ) ஏப்ரல் 24

✓ பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியமானது (ITU) ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் வரும் நான்காவது வியாழக்கிழமை அன்று பன்னாட்டு தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழினுட்பத்தில் பெண்கள்" நாளை கொண்டாடுகிறது. இந்த ஆண்டு, ஏப்ரல்.22 அன்று, அந்நாளின் 10ஆவது ஆண்டு நிறைவை "Connected Girls; Creating Brighter Futures" என்ற கருப்பொருளுடன் அது கொண்டாடியது.

✓ பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியமானது ஐநா அமைப்பின் சிறப்பு நிறுவனமாகும். அது ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

**5.** **சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக, பின்வரும் எந்த இரு நாடுக–ளுடன் இணைந்து ஜப்பான் தனது முதல் கூட்டு இராணுவப் பயிற்–சியை மேற்கொள்ளவுள்ளது?**



அ) இந்தியா மற்றும் அமெரிக்கா

**ஆ) அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ☑**


இ) ரஷியா அமெரிக்கா

ஈ) ரஷியா மற்றும் பிரான்ஸ்

✓ மண்டல நீரில் சீனாவின் எல்லைமீறிய நடவடிக்கைகளுக்கு மத்தியில், அமெரிக்கா (US) மற்றும் பிரெஞ்சு துருப்புக்களுடன் இணைந்து ஜப்பான் தனது முதல் கூட்டு இராணுவப்பயிற்சியை நடத்தவுள்ளது. இந்தப்பயிற்சி மே 11–17 வரை நடைபெறும். இது மூன்று நாடுகளின் தரைப்படைகளை உள்ளடக்கிய முதல் மிகப்பெரிய அளவிலான பயிற்சியாகும். இப்பயிற்சி, 3 நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்தும்.

---

**6.** **வளரும் நாடுகளின் காலநிலை நிதியை இரட்டிப்பாக்க, 'சர்வதேச காலநிலை நிதித் திட்டத்தை' அறிவித்த நாடு எது?**



அ) சீனா

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன், "அமெரிக்க சர்வதேச காலநிலை நிதி திட்டத்தை" வெளியிட்டார். பைங்குடில் வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு ஏழை நாடுகளுக்கு உதவும் வகையில். நாட்டின் காலநிலை நிதியை இரட்டிப்பாக்கும் என்று அவர் அறிவித்தார். புதிய காலநிலை நிதி திட்டம், 2005ஆம் ஆண்டின் வாயு உமிழ்வை ஒப்பிடும்போது அதிலிருந்து 50% –52% பைங்குடில் வாயு உமிழ்வை குறைக்கும் புதிய குறிக்கோளுடன் வெளியிடப்பட்டுள்ளது.

---

**7.** **அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, அன்னபூர்ணா மலைச்சிகரம் அமைந்துள்ள நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) நேபாளம் ☑**

இ) வங்காளதேசம்

ஈ) சீனா

✓ இமயமலையில் உள்ள அன்னபூர்ணா மலைத்தொடர் வடக்கு மத்திய நேபாளத்தில் அமைந்துள்ளது. இது உலகின் பத்தாவது மிகவுயரமான (8000 மீ) மலைச்சிகரமாகும். சமீபத்தில், மகாராஷ்டிராவின் சதாராவைச் சேர்ந்த பிரியங்கா மோகித், இம்மலைச்சிகரத்தை அடைந்த முதல் இந்தி–யப்பெண்மணி என்ற பெருமையைப்பெற்றார். அவர், ஏற்கனவே எவரெஸ்ட் மலைச்சிகரம் உட்பட பல சிகரங்களை அடைந்துள்ளார்.

**8.** **கைவிடப்பட்ட சிறார்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக, 'ஹரிஹர்' என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?**

அ) பீகார்

ஆ) உத்தர பிரதேசம்

**இ) ஹரியானா ☑**

ஈ) பஞ்சாப்

✓ ஹரியானா மாநில அமைச்சரவையானது 'ஹரிஹர்' – வீடற்ற கைவிடப்–பட்ட மற்றும் சரணாகதி அடைந்த சிறார்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முன்னெடுப்புக்கு ஹரியானா கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது.

✓ ஐந்து அகவைக்குக்கீழ் கைவிடப்பட்டிருந்தாலோ அல்லது ஒரு அகவை முடியும் முன்னரோ சரணாகதி அடைந்த சிறார்களுக்கு அவர்களின் 25 அகவை வரை கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நிதியுதவி அளிக்கப்படும். திருமணத்திற்கும் உதவி வழங்கப்படும்.

**9.மனித உடலின் ஒத்த மாதிரியாக செயல்படும் பல்வேறு உயிரணு வகைகளைக்கொண்ட மனித உறுப்புகளின் சிறிய மாதிரிகளுக்கு கொடுக்கப்பட்ட பெயர் என்ன?**



அ) உடல் மாதிரிகள்

**ஆ) திசு சில்லுகள் ☑**


இ) செல் மாதிரிகள்

ஈ) திசு மரபணுக்கள்

✓ 'திசு சில்லுகள்' மனித உறுப்புகளின் சிறிய மாதிரிகள் ஆகும்; அவை, மனிதவுடலுக்கு ஒத்ததாக செயல்படும் பல்வேறு உயிரணு வகைகளை கொண்டுள்ளன. வர்த்தக குழு திட்டத்தின்கீழ், NASA மற்றும் ஸ்பேஸ் X இடையேயான ஒத்துழைப்பின் ஒருபகுதியாக 4 விண்வெளி வீரர்கள் சமீபத்தில் பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். விண்வெளி ஆய்வுகளில் திசு சில்லுகளின் பயன்பாடு குறித்து ஆராய்வ –தில் அவர்கள் கவனம் செலுத்துவர்.

---

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'இ–2025 முன்னெடுப்பு' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**



அ) பருவநிலை மாற்றம்

**ஆ) மலேரியாவை ஒழித்தல் ☑**

இ) நிதியியல் தொழில்நுட்பம்

ஈ) ஊட்டச்சத்து

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) தனது 'E–2025 முன்னெடுப்பின்'கீழ் வரும் 2025ஆம் ஆண்டுக்குள் மலேரியாவை ஒழிக்கும் திறனுடன் 25 நாடுகளை அடையாளம் கண்டுள்ளது. மலேரியா ஒழிப்பு தொடர்பான WHO–ஜீரோயிங்கின் புதிய அறிக்கையின்படி, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மூன்று நாடுகள் உட்பட இந்த 25 நாடுகளும், மலேரியா மற்றும் COVID–19 ஆகிய இரட்டை அச்சுறுத்தலுக்காகவும் செயல்பட வேண்டியிருக்கும்.

✓ இந்த நாடுகளுக்கு உலக நலவாழ்வு அமைப்பு தனது ஆதரவு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. போர் தேவையில்லை!**

COVID பெருந்தொற்றை வீழ்த்த போர் எதையும் நடத்தத் தேவையில்லை. மாறாக, முகக்கவசம் – சமூக இடைவெளி – கை தூய்மை ஆகியவற்றை மக்கள் கடைப்பிடித்தாலே போதுமானது. கரோனா தீநுண்மியிடம் மட்டும் தீண்டாமை கொண்டால் மனிதகுலம் மகிழ்ச்சியாக வாழ வழி கிடைக்கும். அதற்கு வீட்டிலிருந்தாலும் வெளியில் சென்றாலும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை எப்போதும் எச்சரிக்கை உணர்வுடன் கடைப்பிடிப்ப –து, அடிக்கடி கைகளைக் கழுவுதல் ஆகியவற்றைப் பின்பற்றினால் COVID தீநுண்மி மனிதகுலத்தை நெருங்காது.

குறிப்பாக, ஏதேனும் பொருளையோ (அ) இடத்தையோ தொடநேர்ந்தால், உடனே சோப்பினால் கைகளைக் கழுவிக்கொள்ளவேண்டும். வெளியிட –ங்களில் இருக்கும்போது சானிடைசர் பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்துகொள்ளலாம். சானிடைசர் இல்லையென்றாலும், சாதாரண சோப்பி –ன்மூலம் கைகளைக் கழுவினாலே கரோனாவை விரட்டியடிக்க முடியும்.

மனிதனிடமிருந்து பிரிக்க முடியாத ஓர் உறுப்பாகவே தற்போது திறன்பேசி மாறியுள்ளது. அதனைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அதுவே கரோனாவைப் பரப்பும் காரணியாக மாறக்கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, கடைகளுக்கும், பிற இடங்களுக்கும் செல்ல நேர்ந்தால், திறன்பேசியைத் தவிர்ப்பது நல்லது.

நல்ல காற்றோட்டம் கரோனா பரவலைத் தடுக்கும்; குறைக்கும். அதனால், வீடுகளில் ஜன்னல்களைத் திறந்து வையுங்கள். சூரிய ஒளியும், சுத்தமான காற்றும் வீட்டுக்குள் வரவேண்டியது அவசியம். குடும்ப உறுப்பினர்களாக –வே இருந்தாலும் அரட்டை, நெருக்கம், நெரிசல் பாராட்டுவது நமக்குப் பகை. கவசம், காற்று, தொலைவு, தூய்மை ஆகியவை மட்டுமே நமக்கு நன்மைதரும். COVID தீநுண்மி குறித்த விழிப்புணர்வே நோய்த்தடுப்பின் முதல் ஆயுதம் என்பதை மறந்து விடாதீர்கள்.

**நமது உயிர்க்கவசம்**

முகக்கவசத்தை முறையாக அணிய வேண்டும். மூக்கையும் வாயையும் மூடவேண்டும். இறுக்கமாக இல்லாமல் முகக்கவசம் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.

---

**2. பெண் காவலர்களுக்கு 'குறைதீர்க்கும் மனுபெட்டி' திட்டம் தொடக்கம்**

சென்னை காவல்துறையில் பணிபுரியும் பெண்காவலர்களுக்காக, 'குறை தீர்க்கும் மனுபெட்டி' என்ற திட்டத்தை காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் தொடக்கிவைத்தார்.

---

**3. தேஜஸ் போர் விமானத்தில் 'பைத்தான்–5' ஏவுகணை இணைப்பு**

முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தேஜஸ் இலகு இரக போர் விமா –னத்தில் வானிலிருந்தபடி வானிலக்கை துல்லியமாகத் தாக்கியழிக்கும் அதிநவீன ஐந்தாம் தலைமுறை ஏவுகணையான 'பைத்தான்–5' ஏவுக –ணையை ஏந்திச்செல்ல ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

'பைத்தான்–5' ஏவுகணையுடன் போர் விமானத்தின் செயல்பாட்டை மதிப் –பீடு செய்யும் வகையில் தொடா்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை –களின் முடிவில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரி –வித்தனர். இதுகுறித்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உள்நாட்டு தயாரிப்பான தேஜஸ் போர் விமானத்தில் ஏற்கனவே 'டெர்பி' ஏவுகணை இணைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், பார்வைக்கு அப்பால் உள்ள வான் இலக்கையும் மிக வேகமாகச்சென்று துல்லியமாகத் தாக்கியது. அதனைத் தொடர்ந்து ஐந்தாம் தலைமுறை தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பைத்தான்–5 ஏவுகணையும் அதில் இணைக்கப்பட்டு கோவாவில் பரிசோதிக்கப்பட்டது. மிகவும் கடினமான சூழல்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக மேற்கொள் –ளப்பட்ட பரிசோதனைகளில், தேஜஸ் போர் விமானம் வானிலிருந்தபடி அனைத்து இலக்குகளையும் 100 சதவீதம் துல்லியமாக வான் இலக்கை தாக்கி அழித்தது. அதனடிப்படையில், பைத்தான்–5 ஏவுகணையும் தேஜஸ் விமானத்தில் இணைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோவாவில் நடத்தப்பட்ட இப்பரிசோதனைக்கு முன்பாக, போர் விமானம் 'பைத்தான்–5' ஏவுகணையை தாங்கிச்செல்லும் திறன்குறித்து பெங்களூ –ரில் சோதனை செய்யப்பட்டது.

வானில் ஏற்படும் உயர் அச்சுறுத்தலை திறம்பட எதிர்கொள்ளும் திறன் படைத்த தேஜஸ் போர் விமானம் இந்தியாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் விமானம் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டதாகும். கடந்த பிப்ரவரியில் ஹெச்ஏஎல் நிறுவனத்திடமிருந்து ₹48,000 கோடியில் 83 தேஜஸ் இலகு இரக போர் விமானங்களை வாங்க மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது.

---

**4. 17 நாடுகளில் இந்திய வகை கரோனா கண்டுபிடிப்பு: உலக சுகாதார அமைப்பு**

இந்திய வகையைச் சேர்ந்த இருமுறை உருமாறிய கரோனா தீநுண்மி, பதினேழு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக நலவாழ்வு அமைப்பு தெரிவித்துள்ளது. உலகம் முழுவதும் கடந்த வாரம் மேலும் 57 இலட்சம் பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும் பல இலட்சம் பேருக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கு B.1.617 என்ற வகையைச் சேர்ந்த இந்திய வகை கரோனா தீநுண்மி காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில், உலக நலவாழ்வு அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட –து. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

ஏப்.27 வரை, 17 நாடுகளில் இருந்து 1,200 முறை B.1.617 வகை கரோனா தீநுண்மி கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் இந்த வகை கரோனா தீநுண்மி கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவில் பரவும் மற்ற வகை கரோனா தீநுண்மிகளைவிட B.1.617 வகை தீநுண்மி வேகமாக வளர்ந்து பரவும் தன்மைகொண்டது.

இதனால்தான் இந்தியாவில் முதல் அலையைக் காட்டிலும் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும், பொதுசுகாதார விதிகளைப்பின்பற்றாமல் இருப்பது, கரோனா நெறிமுறைக –ளைப் பின்பற்றாமல் தேர்தல், திருவிழா, கலாசார நிகழ்ச்சிகளுக்கு மக்கள் ஒன்றாகக் கூடுவதும் கரோனா பரவலுக்கு காரணமாக இருக்கலாம். இவை தொடர்பாக மேலும் பல ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. மத்திய நிதித்துறை செயலராக டி வி சோமநாதன் நியமனம்**

மத்திய நிதித்துறை செயலராக தமிழ்நாடு பிரிவு இ ஆ ப அதிகாரி டி வி சோ–மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1987ஆம் ஆண்டின் தமிழக பிரிவு இஆப அதிகாரியான டி வி சோமநாதன் மத்திய நிதியமைச்சகத்தின் செல–வினத்துறை செயலராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், அவர் மத்தி–ய நிதித்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய நிதியமைச்சகத்–தில் உள்ள செயலர்களில் மிக மூத்த அதிகாரி நிதித்துறை செயலராக நியமிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

**6. சுங்கத்துறை குற்றங்களைத் தடுக்க பிரிட்டனுடன் ஒப்பந்தம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

சுங்கத்துறை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் பிரிட்டனுடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதவது: பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பிரிட்டன், வட அயர்லாந்து ஆகிய நாடுகளுடன் சுங்கத்துறை விவகாரங்களில் பரஸ்–பர நிர்வாக உதவி, ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு ஒப்பந்தம் மேற்கொ–ள்ளவும், அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சுங்கத்துறை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதிலும், அவற்றை விசாரிப்–பதிலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் உதவும். மேலும், இருநாட்டு சுங்கத்துறை நிர்வாகத்துக்கு இடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு சட்டரீதியிலான வழிமுறையை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தித் தரும். நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் விரைவில் ஒப்புதல் கிடைக்கவும் இந்த ஒப்பந்தம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. கீழடி ஏழாம்கட்ட அகழாய்வு: முதுமக்கள் தாழிகளிலிருந்து பானைகள் கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்றுவரும் ஏழாம் கட்ட அகழாய்வில் கொந்தகைப் பகுதியில் கிடைத்த 2600 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழிகளிலிருந்து குறியீடுகளுடன் கூடிய பானைகள் கண்டெடுக்கப்பட்டன. கீழடியில் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் ஏழாம்கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிப்.13ஆம் தேதி தொடங்கிய இந்த அகழாய்வுப் பணிகள் கீழடி, அகரம், கொந்தகை ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

அப்போது கொந்தகையில் மூன்று குழிகள் தோண்டப்பட்டு ஏழு முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் 3 மற்றும் நான்காம் எண்கொண்ட முதுமக்கள் தாழிகளில் இருந்த பொருள்கள் ஆய்வுக்காக வெளியே எடுக்கப்பட்டன. மூன்றாம் எண்கொண்ட தாழி முழுமையாக கிடைத்ததால் அதற்குள் மனித எலும்புகள், பானைகள் மற்றும் இரும்பு ஆயுதம் உள்ளிட்ட–வை இருந்தன. இதில் சிறிய வடிவிலான பானைகளில் ஒரேமாதிரியான குறியீடுகள் காணப்படுகின்றன. இது உணவுப்பாத்திரம் (அ) குவளையாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

19 செமீ விட்டமுள்ள ஓர் உணவுப் பாத்திரத்தின் உயரம் 4.5 செமீ உள்ளது. மற்றொரு பாத்திரம் 14 செமீ விட்டமும், 16 செமீ உயரமும் உள்ளது. மற்றொ–ரு பாத்திரம் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. 3 குறியீடுகளும் எதனைக் குறிக்கிறது என்பது குறித்து அடுத்த கட்ட ஆய்வுக்குப் பின்னரே தெரியவரும். கீழடி ஆறாம் கட்ட அகழாய்வில் 42 குழிகளில் 39 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றிலிருந்து 20 எலும்புக்கூடுகள் வெளியே எடுக்கப்பட்டன. இதில் சிலவற்றில் இதுபோன்ற பாத்திரங்கள் இருந்தன. ஆனால் அதில் குறியீடுகள் எதுவும் காணப்படவில்லை.

ஏழாம்கட்ட அகழாய்வில் இதுவரை வெளியே எடுக்கப்பட்டுள்ள 2 முதுமக்க–ள் தாழிகளிலும் குறியீடுகளுடன் பாத்திரங்கள் கிடைத்துள்ளது குறிப்பிட–த்தக்கது. மேலும் ஆறாம்கட்ட அகழாய்வில் வெளியே எடுக்கப்பட்ட எலும்பு–க்கூடுகளை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் லக்னோவில் உள்ள பீர்பால் ஷாகினி இன்ஸ்டிடியூட் ஆப் பேலியோ சயின்ஸ் ஆய்வு கூடத்துக்கு ஆய்வுக்காக அனுப்பியுள்ளது.

ஆனால் வடமாநிலங்களில் கரோனா தொற்று பரவல் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அந்த ஆய்வகம் மூடப்பட்டு, அது கரோனா வார்டாக மாற்றப்பட்டு–ள்ளதாக கூறப்படுகிறது. எனவே எலும்புகளின் DNA பரிசோதனை முடிவு–கள் வருவதில் அதிக காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**8. 2020'இல் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் இந்தியா மூன்றாவது இடம்**

கடந்த 2020ஆம் ஆண்டில் ராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் அமெரிக்கா மற்றும் சீனாவை தொடர்ந்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் 'ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்' உள்ளது.

உலகளாவிய இராணுவ செலவினம் மற்றும் ஆயுத வர்த்தகத்தை இந்த நிறுவனம் கண்காணித்து வருகிறது. உலக நாடுகளின் இராணுவ செலவினம் தொடர்பான இதன் சமீபத்திய அறிக்கை வெளியானது. இதன்படி கடந்த 2020ஆம் ஆண்டில் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. உலக நாடுகளின் ஒட்டுமொத்த இராணுவ செலவில் அமெரிக்காவின் பங்கு 39 சதவீதமாக உள்ளது. இதையடுத்து சீனாவின் பங்கு 13 சதவீதமாகவும் இந்தியாவின் பங்கு 3.7 சதவீதமாகவும் உள்ளது.

அமெரிக்கா தனது இராணுவத்துக்கு கடந்த 2020'ல் 77,800 கோடிடாலர் செலவிட்டுள்ளது. சீனா 25,200 கோடி டாலரும் இந்தியா 7,290 கோடி டாலரும் செலவிட்டுள்ளன. கடந்த 2020ஆம் ஆண்டில், கரோனா வைரஸ் பரவல் இருந்தாலும் இந்த மூன்று நாடுகளும் முந்தைய ஆண்டைவிட கூடுதலாக இராணுவத்துக்கு செலவிட்டுள்ளன. அமெரிக்கா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதத்தை இராணுவத்துக்கு செலவிட்டுள்–ளது. சீனா 1.7 சதவீதமும் இந்தியா 2.9 சதவீதமும் செலவிட்டுள்ளன.

2011–2020 வரை அமெரிக்க இராணுவ செலவு 10% குறைந்துள்ளது. ஆனால் சீனாவின் ராணுவ செலவு 76 சதவீதமும் இந்தியாவின் ராணுவ செலவு 34 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது. உலகில் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகள் பட்டியலில் அமெரிக்கா, சீனா, இந்தியாவை தொடர்ந்து, ரஷியா, பிரிட்டன், சவுதி அரேபியா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. 2020'ல் உலக நாடுகளின் மொத்த ராணுவ செலவு முந்தைய ஆண்டைவிட 2.6% அதிகரித்துள்ளது. முதல் ஐந்து நாடுகளின் இராணுவ செலவு, மொத்த இராணுவ செலவில் 62 சதவீதமாக உள்ளது.

---

**1.** **குஜராத் மாநிலத்தின் GIFT நகரத்தில், பின்வரும் எவ்வகையான நிறுவனங்கள் செயல்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளன?**



அ) கொடுப்பனவு வங்கிகள்

**ஆ) வங்கி சாராத நிதி நிறுவனங்கள் ☑**

இ) அகில இந்திய நிதி நிறுவனங்கள்

ஈ) நியோ வங்கிகள்

✓ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் குஜராத்தின் GIFT நகரத்தில், பன்னாட்டு நிதியியல் சேவை மையத்தால் செயல்பட அனுமதியளிக்கப்பதடுள்ளன. கடன்கள், முதலீட்டு வங்கி மற்றும் மூன்றாந்தரப்பு தயாரிப்பு விற்பனை உள்ளிட்ட முழு அளவிலான நிதியியல் சேவைகளை வழங்க அவை அனுமதிக்கப்படுகின்றன.

---

**2.** **"LeadIT" – தொழிற்துறை மாற்றத்துகான தலைமைத்துவ குழுவில் அண்மையில் இணைந்த நாடு எது?**

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) சீனா

இ) ரஷியா

ஈ) ஜப்பான்

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகள் "LeadIT" – தொழிற்துறை மாற்றத்திற்கான தலைமைக் குழுவில் சேர்ந்துள்ளது. அது, இந்தியா மற்றும் சுவீடனின் ஒரு காலநிலை முன்னெடுப்பாகும். அமெரிக்கா 'LeadIT'இல் சேருவதால், பாரிஸ் ஒப்பந்த இலக்குகளை பூர்த்திசெய்யவும், போட்டித்தன்மையை வலுப்படுத்தவும், மூன்று நாடுகளிலும் புதிய நிலையான வேலைகளை உருவாக்கவும் இந்தக் கூட்டணி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3.** APEDA'**இன்படி, 2020-21 நிதியாண்டின் ஏப்ரல்–பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலத்தில், எத்தனை சதவீதத்துக்கு, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது?**

அ) 5.51%

ஆ) 10.51%

**இ) 26.51% ☑**

ஈ) 50.51%

**26.51%**

✓ இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல்–பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 26.51% அதிகரித்துள்ளது என வேளாண் & பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தெரிவித்துள்ளது.

✓ COVID பேரிடர் தொடர்பான பல்வேறு சவால்களுக்கிடையிலும் 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலகட்டத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26.51% அதிகரித்து ₹43,798 கோடியை எட்டியுள்ளது.

---

**4.** **உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த காலநிலைமாற்ற முன்கணிப்பு மீத்திறன் கணினி உருவாக்கப்படவுள்ள நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) UK☑**

இ) சீனா

ஈ) அமெரிக்கா

✓ மைக்ரோசாப்ட் மற்றும் மெட் ஆபிஸ் (UK) ஆகியவை வானிலை மற்றும் காலநிலை மாற்றத்தை முன்கணிப்பு செய்வதற்காக உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியை உருவாக்க கைகோர்த்துள்ளன.

✓ 2022ஆம் ஆண்டில் செயல்படக்கூடிய இந்த மீத்திறன் கணினி, கடுமையான வானிலைகுறித்த துல்லியமான முன்னெச்சரிக்கைகளை வழங்கும். அது, நாட்டை கடுமையான புயல்கள், வெள்ளம் மற்றும் பனியின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க உதவும்.

---

**5.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை அமைந்துள்ள மாநிலம் எது?**




**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) மகாராஷ்டிரா

ஈ) பஞ்சாப்

✓ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எடப்பாடி க பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்திற்குப் பிறகு, தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை மீண்டும் திறக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

✓ மருத்துவத்துக்கு பயன்படுத்தக்கூடிய உயிர்வளியை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக 4 மாத காலத்திற்கு இவ்வாலை செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தாமிர உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பிற ஆலைகளைத் திறக்கவோ (அ) இயக்கவோ அந்நிறுவனம் அனுமதிக்கப்படாது. உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து இந்த ஆலை, கடந்த 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு அரசால் மூடப்பட்டது.

---

**6.** **டென்னிஸில், 12ஆவது பார்சிலோனா ஓப்பன் பட்டத்தை வென்ற வீரர் யார்?**



**அ) ரபேல் நடால் ☑**

ஆ) ஸ்டீபனோஸ் சிட்சிபாஸ்

இ) ஜானிக் சின்னர்

ஈ) ஆண்ட்ரி ரூப்லெவ்

✓ 12ஆவது பார்சிலோனா ஓப்பன் போட்டியில், ஸ்பானிஷ் டென்னிஸ் வீரர் ரபேல் நடால் பட்டத்தை வென்றார். இது அவரது 87ஆவது பட்டமாகும். முதல் 10 சர்வதேச வீரர்களுள் ஒருவராக உள்ள கிரேக்க வீரர் ஸ்டீபனோஸ் சிட்ஸிபாஸை வீழ்த்தி அவர் இப்பட்டத்தை வென்றார்.

✓ நடாலுக்கும் சிட்சிபாசுக்கும் இடையில் நடந்த இந்த இறுதிப்போட்டி 2021 ஆம் ஆண்டின் மிக நீண்ட ATP போட்டியாக கருதப்படுகிறது.

---

**7.** **'வருணா' என்பது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான பலதரப்பட்ட பாதுகாப்புப் பயிற்சியாகும்?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) இந்தோனேசியா


ஈ) இத்தாலி

✓ 'வருணா' என்பது இந்தியாவிற்கும் பிரான்ஸிற்கும் இடையிலான பலதரப்பட்ட கடற்படைப் பயிற்சியாகும். இந்த இருதரப்பு பயிற்சியின் 19ஆம் பதிப்பு 'வருணா–2021' 2021 ஏப்.27 அன்று நிறைவடைந்தது.

✓ அரபிக்கடலில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியில் மேம்பட்ட வான் பாதுகாப்பு மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு பயிற்சிகள், தீவிர வான்வழி பயிற்சிகள், தரை மற்றும் வான்வழி எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் பிற கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் அடங்கும்.

---

**8.** CSIR **நடத்திய சீரோ ஆய்வின்படி, மார்ச் மாதத்தில் மறுபடியும் COVID-19 பரவியதற்கு, கீழ்காணும் எதன் இல்லாமை, காரணமாக அமைந்தது?**



அ) ஆன்டிஜென்கள்

**ஆ) ஆன்டிபாடிகள் ☑**

இ) லிம்போசைட்டுகள்

ஈ) வெள்ளை இரத்த அணுக்கள்

✓ அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR) நடத்திய செரோ ஆய்வின்படி, கடந்த 2020 செப்டம்பரில் உச்சத்தை அடைந்த COVID-19 மார்ச்சில் மீண்டும் பரவியதற்கு, சீரோ–பாசிட்டிவ் மக்களில் தேவையான ஆன்டிபாடிகள் இல்லாதது காரணமாக இருக்கலாம்.

✓ 17 மாநிலங்கள் மற்றும் இரு யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த 10,427 பேரிடம் CSIR ஒரு சீரோ–ஆய்வை நடத்தியது. ஆய்வு நடத்தப்பட்ட மக்களிடையேயான சராசரி சீரோ–நேர்மறை 10.14 சதவீதமாக இருந்தது.

**9. சுற்றுப்புற வளியிலுள்ள உயிர்வளியை செறிவாக்கும் மருத்துவ சாதனத்தின் பெயர் என்ன?**

அ) தெளிப்பான்

**ஆ) உயிர்வளி செறிவாக்கி ☑**

இ) உயிர்வளி செயற்கை சுவாசக்கருவி

ஈ) உயிர்வளி ஆக்கி



✓ உயிர்வளி செறிவாக்கி என்பது ஒரு மருத்துவ சாதனமாகும்; அது, சுற்றுப்புற வளியில் உள்ள உயிர்வளியை செறிவாக்குகிறது. COVID-19 தொற்றுநோய்களின் போது, நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க இது மிகவும் தேவைப்படுகிறது. இந்த உயிர்வளி செறிவாக்கி, 78% நைட்ரஜன் மற்றும் 21% உயிர்வளியைக்கொண்ட வளிமண்டத்தில் உள்ள உயிர்வளியை ஒரு சல்லடைமூலம் வடிகட்டி, நைட்ரஜனை மீண்டும் வளியில் விடுவித்து, மீதமுள்ள உயிர்வளியை செறிவாக்குகிறது.

---

**10. நடப்பாண்டின் (2021) உலக நோய்த்தடுப்பு வாரத்துக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Vaccines bring us closer ☑**

ஆ) Vaccine Works

இ) Educate and Immunise

ஈ) Vaccination Vacation




✓ ஆண்டுதோறும் ஏப்ரல் கடைசி வாரத்தில், "உலக நோய்த்தடுப்பு வாரம்" அனுசரிக்கப்படுகிறது. நோய்களுக்கு எதிராக எல்லா வயதினரையும் பாதுகாக்க, தடுப்பூசிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. "Vaccines bring us closer" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக நோய்த்தடுப்பு வாரத்துக்கான கருப்பொருளாகும். நடப்பாண்டு (2021) உலக நோய்த்தடுப்பு வாரத்தின் தொடக்கத்தில், நலவாழ்வு ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கூகிள் நிறுவனம் ஒரு டூடுலையும் உருவாக்கியிருந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1.லேசான மற்றும் மிதமான COVID தொற்று: நோயாளிகளுக்கான ஆயுஷ்-64 மருந்து பலனளிக்கும்**

கரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்தச் சூழலில், லேசான மற்றும் மிதமான கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நோயாளிகளுக்கு ஆயுஷ்-64 மருந்து பலனளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய குழு, பல்வேறு மூலிகைகளிலிருந்து தயாரித்த 'ஆயுஷ்-64' மருந்தை தயாரித்துள்ளது. அறிகுறிகள் இல்லாத, லேசான மற்றும் மிதமான கரோனா தொற்று ஏற்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சையில் நல்ல பலனளிப்பதாக நாட்டின் ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லேசானது முதல் மிதமானது வரையிலான தொற்றுள்ள நோயாளிகளுக்கு ஆயுஷ்-64 மருந்தை வழங்கி அதன் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதி செய்ய, பலதரப்பட்ட மருத்துவ சோதனைகளை, ஆயுஷ் அமைச்சகம் - அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி மன்றம் ஆகியவை அண்மையில் வெற்றிகரமாக நிறைவுசெய்தன. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கரோனா மேலாண்மைக்கான தேசிய பணிக்குழு, ஆயுர்வேதம் மற்றும் யோகா அடிப்படையில் தேசிய மருத்துவ மேலாண்மை நெறிமுறைகளுள் இந்த மருந்தை பரிந்துரைத்துள்ளது.

---

**2. இந்தியாவுக்கு 20 டன் மருத்துவ நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது ரஷியா**

COVID தொற்றின் இரண்டாவது அலையில் சிக்கித்தவித்துவரும் இந்தியாவுக்கு உதவுவதற்காக 20 டன் மருத்துவ நிவாரணப் பொருள்களை ரஷியா அனுப்பிவைத்துள்ளது. அந்த நிவாரணப் பொருள்கள் இந்தியாவை வந்தடைந்தன.

**வங்கதேசம் உதவிக்கரம்:** கரோனா தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் இந்தியாவுக்கு அவசரகால மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் வழங்குவதாக அண்டை நாடுகளில் ஒன்றான வங்கதேசம் அறிவித்துள்ளது.

***சீனா ஆதரவு:*** இந்தியாவுக்கு அதிகபட்ச உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. இதேபோல், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, பெல்ஜியம், ருமேனியா, லக்சம்பர்க், சிங்கப்பூர், போர்ச்சுகல், சுவீடன், நியூசிலாந்து, குவைத், மோரீஷஸ் ஆகிய நாடுகளும் இந்தியாவுக்கு உதவி செய்வதாக அறிவித்துள்ளன.

---

**3. சொந்த விண்வெளி நிலையத்துகான கலத்தை வெற்றிகரமாக ஏவியது சீனா**

விண்வெளியில் சொந்த ஆய்வு நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ள சீனா, அதற்கான முக்கிய கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. இதுகுறித்து PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: சீனாவின் விண்வெளி நிலையத் திட்டத்தின் ஒருபகுதியாக, அந்த நிலையத்தின் முக்கிய பகுதியாக அமையவிருக்கும் கலத்தை சீனா விண்ணில் ஏவியுள்ளது. 'தியான்ஹே' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்வெளி ஆய்வுக் கலம், சீனாவின் 'லாங் மார்ச்-5B Y2' இரக ஏவுகலம்மூலம் ஹைனான் மாகாணத்திலுள்ள வென்சாங் ஏவுதளத்திலிருந்து விண்ணிலேவப்பட்டது.

ஏற்கனவே, சிறு அளவிலான, குறைந்த நேரமே செயல்படும் 2 விண்வெளி நிலையக்கலங்களை சீனா சோதனை முறையில் விண்ணில் ஏவியுள்ளது. இந்த நிலையில், முதல்முறையாக மிகப்பெரிய அளவிலான ஆய்வு நிலையக்கலத்தை சீனா முதல்முறையாக விண்ணில் செலுத்தியுள்து. இவ்விண்வெளி நிலையக்கலம், 16.6 மீ நீளமும் 4.2 மீ அகலமும் கொண்டது. விண்வெளி நிலையத்துக்கு வரும் வீரர்கள் தங்கியிருப்பதற்கான தொழில்நுட்ப வசதிகள் அனைத்தும் இதில் உள்ளது.

இக்கலத்தைப் போலவே, 'தியான்காங்' என்று பெயரிடப்பட்டுள்ள தனது எதிர்கால விண்வெளி நிலையத்துக்கான மேலும் 10 தொகுதிகளை விண்ணில் செலுத்த சீனா திட்டமிட்டுள்ளது. அவற்றைக்கொண்டு உருவாக்கப்படும் சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் 10 ஆண்டுகளுக்குச் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூமியிலிருந்து 340 கிமீ முதல் 450 கிமீ வரையிலான தொலைவில் வலம் வந்து அந்த ஆய்வுக்கலம் செயல்படும் என்று PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டணியில் அமைக்கப்பட்டுள்ள சா்வதேச விண்வெளி நிலையம் மட்டுமே விண்வெளியில் இயங்கி வருகிறது. எனினும், அந்த ஆய்வு நிலையத் திட்டத்தில் சீனா பங்கேற்க அமெரிக்கா அனுமதிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து, சொந்தமாக விண்வெளி நிலையம் அமைக்க சீனா முடிவுசெய்தது. அதன் விளைவாகவே, 'தியான்காங்' விண்வெளி நிலைய திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டு வரும் சர்வதேச விண்வெளி நிலையம் வரும் 2024ஆம் ஆண்டுடன் ஓய்வுபெறுகிறது. அதற்குள் சீனா விண்வெளி நிலையம் வெற்றிகரமாக அமைக்கப்பட்டால், விண்ணில் செயல்படவிருக்கும் ஒரே ஆய்வுநிலையமாக அது இருக்கும் என்று கூறப்படுகிறது.

---

**4. முதுகுளத்தூர் அருகே சங்ககால பொருள்கள் கண்டெடுப்பு**

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே கருங்கலக்குறிச்சியில் 2,000 ஆண்டுகள் பழைமையான சங்ககாலத்தைச் சேர்ந்த மான் கொம்புகள், கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் உள்ளிட்ட பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இங்கு கிடைத்த ஒரு முழு செங்கல்லின் நீளம் 29 செமீ அகலம் 15 செமீ உயரம் 7 செமீ ஆகும். இது பொ ஆ 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்ககால செங்கல் அளவில் உள்ளது. இதேபோன்ற செங்கல் கமுதி அருகே பேரையூரிலும் கிடைத்துள்ளது. இரு கருப்பு, சிவப்பு நிற பானை ஓடுகளில் ஆங்கில எழுத்துகளான "உ, ஏ" போன்ற குறியீடுகள் உள்ளன. இதில் "உ" போன்ற குறியீடு அழகன்குளம் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரைப்புக்கல் சிவப்புநிற கல்லிலும், குழவி கருங்கல்லிலும் செய்யப்பட்டுள்ளது.

---